

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 161 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 08 – திங்கள்கிழமை 22 ஜனவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 161: Thiruvalluvar Year - 2055 - Thai 08 - Monday 22 January 2024 - Madurai 12 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், கழகக் கொடியை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி ஏற்றி வைத்தார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

## மாநிலங்களை நகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் வல்லாதிக்கப் போக்கிற்குக் கண்டனம்!

### சேலத்தில் நடைபெற்ற இளைஞர் அணி 2–வது மாநில உரிமை முழக்க மாநாட்டில் தீர்மானம்!

### தலைவர், முதல்வர் முன்னிலையில் – மாநாட்டுத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்மொழிந்தார்!

**சேலம், ஜன. 22-**

**சேலம் - பெத்தநாயக்கன்பாளையத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு - மாநில உரிமை மீட்பு முழக்கமாக எழுச்சியுடன் நடைபெற்றது. இம்மாநாட்டில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவுப் பேருரையாற்றினார்.**

**முன்னதாக நேற்று காலை மாநாட்டில் 25 முத்தாய்ப்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**அத்தீர்மானங்களை மாநாட்டுத் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்மொழிந்திட, மாநாட்டில் திரண்ட இலட்சோப இலட்ச இளைஞர்கள், கழக முன்னணியினர், மக்கள் கரவொலி எழுப்பி வரவேற்றிட அத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**மாநாட்டுத் தீர்மானங்களில் இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கு அனுமதியளித்த ஜனநாயகப் பாதுகாவலர் - கழகத் தலைவருக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**




**மேலும் மாநிலங்களை நகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வல்லாதிக்கப் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 25 தீர்மானங்களை கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநாட்டின் ஒப்புதலுடன் நிறைவேற்றினார்.

அத்தீர்மானங்கள் வருமாறு: -

**தீர்மானம் - 1**

**இளைஞர் அணியின் மாநில மாநாட்டிற்கு அனுமதியளித்த ஜனநாயகப் பாதுகாவலர் கழகத் தலைவர் அவர்களுக்கு நன்றி!**

கூட்டாட்சிக் கொள்கைக்கு வலிமை சேர்க்கும் வகையில், இந்திய ஒன்றியத்தின் ஒருமைப்பாட்டையும் பன்முகத்தன்மையையும் பாதுகாக்கும் பெரும் பொறுப்பில் எவ்வித சமரசமுமின்றிப் பாடுபடும் பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வழியில் முன்னெடுத்துச் செல்லும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த பத்தாண்டு கால மக்கள் விரோத பா.ஜ.க. ஆட்சியில் பறிக்கப்பட்ட, தமிழ்நாடு உள்ளிட்ட இந்திய மாநிலங்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் ஜனநாயகப் பாதுகாவலராகத் திகழ்ந்து வரும் நிலையில், தன்னால் வளர்த்தெடுக்கப்பட்ட இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டிற்கு அனுமதி தந்து, அதனை மாநில உரிமை மீட்பு முழக்கமாக முன்னெடுக்கச் செய்த இளைஞர் அணியின் தாயுமானவரான கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் - 2**

**தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்க அயராது பாடுபடும் முதலமைச்சருக்கு இளைஞர் அணி என்றும் துணை நிற்கும்!**

மாநிலங்களின் அதிகார உரிமைகள், சட்ட உரிமைகள், நிதி உரிமைகள் உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் ஒன்றிய பா.ஜ.க அரசு பறித்து வரும் நிலையிலும் கூட, தமிழ்நாட்டை இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக முன்னேற்றுகிற வகையில், ‘எல்லாருக்கும் எல்லாம்’ என்ற ஒப்பற்ற சிந்தனையுடன் திராவிட மாடல் அரசைத் தலைமை தாங்கி நடத்தி வரும் இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் மக்கள் நலத் திட்டங்களையும், பொருளாதார

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## நிதி நெருக்கடியிலும் பொங்கல் பரிசு வழங்கி மக்களை மகிழ்ச்சிப் பொங்கச் செய்த முதல்வருக்கு நன்றி - பாராட்டு!

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 22-01-2024

# கம்பன் காட்டும் நாடும் மோடி காட்டிய நாடும்

**வ**ண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்;
திண்மைடும், ஓர் செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்;
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்.

(வண்மை – கொடை, திண்மை – துணிவு, செறுநர் – பகைவர், வெண்மை – அறியாமை)

கம்பராமாயணம் பேசுபவர்கள் அனைவரும் சிலாகித்துச் சொல்லும் பாடல் இது. ‘கம்பன் சொல்லுவான்’ என்ற பீடிகையுடன் முழங்குவார்கள். அயோத்தி நகரின் செழுமை எப்படி இருந்தது என்பதைச் சொல்லும் பாடல் இது.

அயோத்தியில் வறுமை என்பதே இல்லை என்பதால் கொடைக்கு அவசியமில்லை!

பகைவர் எவரும் இல்லை என்பதால் துணிவுக்கும் வேலையில்லை!

பொய்யுரை ஏதும் இல்லை என்பதால் உண்மைக்கும் பொருளில்லை!

மிக்க கேள்வியறிவு பொருந்தி இருப்பதால் அறியாமை என்பதும் இல்லை.!

இது தான் அயோத்தியைப் பற்றிய கவி கம்பரின் அருமையான கற்பனையாகும்.

இல்லை இல்லை என்று இடப்படும் இப்பட்டியலில் உள்ளவை நான்கும் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட நான்கு பெருமிதங்கள் ஆகும். அந்த நான்கு பெருமிதங்களை எடுத்து அயோத்தி நகரம் தாங்கி நின்றது என்பது கம்பனின் விதந்தோதுதல் ஆகும். ‘பொய்யாமை யன்ன புகழில்லை’ என்ற வள்ளுவன் வரியையும் இத்தோடு இணைத்துக் கொள்கிறார் கம்பர். அதனால் தான், ‘கம்பன் கண்ட கனவு’ என்பார் அறிஞர் அ.ச.ஞானசம்பந்தன்.

**இன்று திடீரென அயோத்தி பஜனை அதிகமாகக் கேட்கிறது. இதனை பா.ஜ.க. அரசியல் பஜனையாகவே ஆக்கிவிட்டது. பக்தியும், கடவுளும் அவரவர் தனித்த உரிமையாம். விருப்பமாம். அதனை அரசியல் மூலதனம் ஆக்கிக் கொண்டிருக்கிறது பா.ஜ.க.வும், அதன் தலைமையும். பத்தாண்டுகளுக்கு முன்னால் மக்களுக்கு கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றாத பிரதமர் நரேந்திரமோடி, ராமருக்கு கோவில் கட்டியதையே ( அதுவும் முழுமையாகக் கட்டிமுடிக்கவில்லை என்பது பக்தர்களின் வருத்தம். அதனை சரியாகக் கட்டவில்லை என்று இந்து சாமியார்களின் குற்றச்சாட்டு!) சாதனையாகச் சொல்லப் பார்க்கிறார்.**

**கம்பன் காட்டிய, கனவு கண்ட நாட்டை உருவாக்கி விட்டாரா பிரதமர் நரேந்திரமோடி? அதைச் செய்திருந்தால் பாராட்டலாம்.**

**“பாரதத்தில் இருந்து வறுமையை ஒழிப்பது இன்றியமையாதது. அந்த நேசத்துக்குரிய இலக்கை அடையும் வரை நாங்கள் ஓய மாட்டோம்” என்று கடந்த அக்டோபர் மாதம் ஒரு பள்ளி விழாவில் பிரதமர் பேசினார். அப்படியானால் வறுமை இங்கே இருப்பதை அவரே ஒப்புக் கொண்டார். ‘வண்மை இல்லை, வறுமை இன்மையால்’ என்று அவரால் சொல்ல முடியவில்லை.**

கடந்த ஒன்பது ஆண்டு கால மோடி ஆட்சியில் இந்தியாவில் பட்டினி அதிகரித்துள்ளது என்பது குறித்த புள்ளிவிபரம், அதே அக்டோபர் மாதம்தான் வெளியானது. உலகப் பட்டினி குறிப்பீட்டில் (Global Hunger Iidex ) இந்தியா இதுவரை இல்லாத அளவுக்கு மிக மோசமான இடத்தை அடைந்துள்ளது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 125 நாடுகளில் 111 ஆவது இடத்தை பெற்றுள்ளது மோடியின் இந்தியா. 28.7 என்ற புள்ளிகளை மட்டுமே மோடியின் பாரதம் பெற்றிருந்தது. பாகிஸ்தான் 102 ஆவது இடத்திலும், வங்கதேசம் 81 ஆவது இடத்திலும், நேபாளம் 69 ஆவது இடத்திலும், இலங்கை 60 ஆவது இடத்திலும் இருக்கிறது. மோடியின் பாரதம், 111 ஆவது இடத்தில் இருக்கிறது.

**மோடியின் ஆட்சிக்குப் பிறகு தான் நிலைமை மோசம் ஆகி இருக்கிறது.**

2011 ஆம் ஆண்டு 122 நாடுகளில் இந்தியா 67 ஆவது இடம்

2012 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 65 ஆவது இடம்

2013 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 63 ஆவது இடம்

2014 ஆம் ஆண்டு 120 நாடுகளில் 55 ஆவது இடம் – என இந்தியாவில் பட்டினிக் குறியீடு இருந்தது. 2014 ஆம் ஆண்டு மோடி, இந்தியாவின் பிரதமராகிறார். அதன்பிறகு என்ன ஆனது பாருங்கள்...

2015 ஆம் ஆண்டு 117 நாடுகளில் 80 ஆவது இடம்

2016 ஆம் ஆண்டு 118 நாடுகளில் 97 ஆவது இடம்

2017 ஆம் ஆண்டு 119 நாடுகளில் 100 ஆவது இடம்

2018 ஆம் ஆண்டு 132 நாடுகளில் 103 ஆவது இடம்

2019 ஆம் ஆண்டு 117 நாடுகளில் 102 ஆவது இடம்

2020 ஆம் ஆண்டு 107 நாடுகளில் 94 ஆவது இடம்

2021 ஆம் ஆண்டு 116 நாடுகளில் 101 ஆவது இடம்

2022 ஆம் ஆண்டு 121 நாடுகளில் 107 ஆவது இடம்

2023 ஆம் ஆண்டு 125 நாடுகளில் 111 ஆவது இடம் – என **இந்தியாவின் பட்டினிக் குறிப்பீட்டில் மோடியின் பாரதம் சரிந்து கொண்டே வந்துவிட்டது. இதுதான் மோடி காட்டிய பாரத நாடு ஆகும். இதைப் பற்றி எல்லாம் எந்தக் கவலையும் இல்லை. ஆனால் கோவில் கட்டுவதன் மூலமாக தன்னால் ஏற்பட்ட அத்தனை வேதனைகளையும் மறைக்கப் பார்ப்பதுதான் அரசியல் மோசடி ஆகும்.**

காஷ்மீருக்கு சிறப்பு அதிகாரம் பறிப்பு – குடியுரிமைச் சட்டம் கொண்டு வருதல் ஆகியவற்றின் மூலமாக தங்களை மதக் காவலர்களாகக் காட்டுவதும் ஒருவகையான ஏமாற்றுதல் ஆகும். உண்மையான மனிதாபிமானம் இருக்குமானால் அந்த மதத்தைச் சேர்ந்த மக்களின் நல்வாழ்வுக்கு நன்மை செய்திருக்க வேண்டும். அவர்களது கண்ணீரைத் துடைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு விலைவாசியை குறைத்திருக்க வேண்டும். பெட்ரோல், டீசல், சிலிண்டர் விலையைக் குறைத்திருக்க வேண்டும். அவர்கள் மனதிலும் முகத்திலும் புன்னகையை வர வைத்திருக்க வேண்டும். இது எதையும் செய்ய முன்வரவில்லை.

**கார்பரேட்டுகளுக்கு வண்மையும் (கொடைகள்) ஏழைகளுக்கு வறுமையும் தான் மோடி காட்டும் நாடு.**

# 1500 டிரோன்கள் மூலம் ஒளி - ஒலி காட்சிகள்!

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் மாநாட்டுச் சுடர்!

## இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!



**சேலம், ஜன.22 - கழக இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலம் பெத்த நாயக்கன் பாளையத்தில் நேற்று தொடங்கியது. முன்னதாக நேற்று முன்தினம் மாலை மாநாட்டு திடலை கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின், பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி. மற்றும் இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பார்வையிட்டனர்.**

முன்னதாக இளைஞர் அணி மாநாட்டில் பங்கேற்க சென்னையில் இருந்து விமானம் மூலம் சேலம் வந்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் எழுச்சி மிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து மாநாட்டுத் திடலுக்கு அவர் சென்ற போது வழி எங்கும் கழகத் தோழர்கள் மற்றும் இளைஞர் அணித் தோழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### மாநாட்டுச் சுடர்!

சென்னையில் 18.1.2024 அன்று அண்ணாசாலை பெரியார் சிலை - பேரறிஞர் அண்ணா சிலை மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகே கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட மாநாட்டுச் சுடர் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி வழியாக 316 கிலோ மீட்டர் தூரம் பயணித்து நேற்று முன்தினம் மாலை சேலம் மாநாட்டு திடலை வந்தடைந்தது. இளைஞரணி துணைச் செயலாளர்கள் அந்தச் சுடரை கழக இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்க, அவர் அதை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்தச் சுடரை மாநாட்டுத் திடலில் ஏற்றி வைத்தார். அந்த மாநாட்டு முகப்பில் ஏற்றப்பட்ட அந்தச் சுடர் மாநாடு முடியும் வரை தொடர்ந்து எரிந்து கொண்டு இருக்கும்.

### 1000 பைக் பேரணி!

அதனைத் தொடர்ந்து நவம்பர் 19 ஆம் தேதி கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை அருகே கழக அரசின் சாதனைகளும், நீட் தேர்வு ரத்து குறித்து விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் தமிழ்நாடு முழுவதும் பேரணியாக சுற்றிவந்த இளைஞரணி தோழர்கள் கௌரவிக்கப்பட்டனர். முன்னதாக அவர்கள் இருசக்கர வாகனத்தில் மாநாட்டை நோக்கி பேரணியாக வந்ததை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் முன்னணி நிர்வாகிகளும் பார்வையிட்டனர்.

### புகைப்படக் கண்காட்சி!

அதையடுத்து புகைப்பட கலைஞர் கோவை சுப்பு மாநாட்டு திடலில் அமைத்திருந்த கழக இளைஞரணி வரலாறு தொடர்பான புகைப்படக் கண்காட்சியை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

### 1500 டிரோன்கள்

அதையடுத்து இளைஞர் அணியினர் ஏற்பாடு செய்திருந்த 1500 டிரோன் கேமிராக்கள் ஒரே சமயத்தில் வானில் பறக்க விடப்பட்டது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்த டிரோன் வெளிச்சத்தில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின், இளைஞரணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞரணியின் சின்னம், தந்தை பெரியாரின் கைத்தடி உள்ளிட்ட உருவங்கள் வண்ணமயமாக வானில் சுடர்விட்டு பிரகாசித் திருந்தது. அதுமட்டுமின்றி திராவிட இயக்க வரலாறு, கழக அரசின் சாதனைகள், ஒளி-ஒலி காட்சிகள் மூலம் காண்பிக்கப்பட்டது. கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களும், இளைஞரணிச் செய லாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் மற்றும் முன்னணி நிர்வாகிகள் அந்த ஒளி-ஒலி காட்சியை பார்வையிட்டனர்.

### பாடல் நிகழ்ச்சி!

அடுத்து கழக பாடகர் - சிறுபான்மையினர் நல ஆணைய துணைத் தலைவர் இறையன்பு குத்தூஸ் குழுவினரின் பாடல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

மேற்காணும் நிகழ்ச்சிகளில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., எஸ்.ஆர்.சிவலிங்கம், ஆர்.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ். ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, கே.இ.பிரகாஷ், ப.அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் மற்றும் வீரபாண்டி ஆ.பிரபு, மணிகண்டன், அருண் பிரசன்னா, கேபிள் சரவணன் உள்ளிட்ட மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

# ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய 108 ஆம்புலன்ஸ் சேவை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

*சேலம், ஜன. 22 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் நேற்று (21.01.2024) சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய 108 ஆம்புலன்ஸ் சேவையினைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.*

*முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், இன்றைய தினம் சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய 108 ஆம்புலன்ஸ் சேவை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.*

*சேலம் மாவட்டத்தில் ஏற்கனவே 52 எண்ணிக்கையிலான 108 ஆம்புலன்ஸ் சேவைகள் செயல்பாட்டில் உள்ளன. இன்றைய தினம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக ஒரு 108 ஆம்புலன்ஸ் சேவை வாகனத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். இதன்மூலம் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது.*

*இந்த வாகனம் ஏத்தாப்பூர், ஆரியபாளையம், குமாரபாளையம், பனைமடல் புத்திரகவுண்டம் பாளையம் போன்ற கிராமங்களில் உள்ள மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். வீட்டில் காயம் அடைந்தவர்கள், பிரசவம், நெஞ்சு வலி, இதர அவசர உதவி தேவைகளுக்கும், இப்பகுதி மக்களுக்கு விரைவில் மருத்துவ உதவி தருவதற்கும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இச்சேவையினை ஏற்பாடு செய்துள்ளார். புதிய ஆம்புலன்ஸ் சேவையினைத் துவக்கி வைத்ததற்கு ஊர் பொதுமக்கள் தங்களது நன்றியினைத் தெரிவித்தனர்.*

*இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர் நலப்பணிகள் (பொ) மரு.மு.வளர்மதி, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.ச.சௌண்டம்மாள், மாநகர் நல அலுவலர் மரு.ந.யோகானந்த் உள்ளிட்ட தொடர்புடைய வட்டார மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.*

# தமிழ்நாட்டில் முக்கிய துறைகளை சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பணியிட மாற்றம்!

*சென்னை, ஜன. 22 - மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளராக இருந்த ஜெயஸ்ரீ முரளிதரன் சமூக நலத்துறை செயலாளராக மாற்றப்பட்டுள்ளார்.*

*தமிழகத்தில் முக்கிய துறைகளை சேர்ந்த ஐ.ஏஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.*

*இதன் விவரம் வருமாறு :*

*வேளாண்துறை ஆணையராக இருந்த எஸ்.சுப்பிரமணியன், தமிழ்வளர்ச்சி மற்றும் தகவல்துறை செயலாளராகவும்,*

*மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளராக இருந்த ஜெயஸ்ரீ முரளிதரன் சமூக நலத்துறை செயலாளராகவும்*

*நில நிர்வாகத்துறை ஆணையராக இருந்த எஸ். நாகராஜன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளராகவும்*

*மீன்வளத்துறை ஆணையராக இருந்த கே.எஸ்.பழனிசாமி, நில நிர்வாகத்துறை ஆணையராகவும்,*

*சமூக நலத்துறை செயலாளராக இருந்த ஜடக் சிரு, மீன்வளத்துறை ஆணையராகவும் மாற்றப்பட்டுள்ளனர்.*

# வலைதளங்களில் வலம் வந்தது!



# அவசியமற்ற ஆளுநர் பதவியை அகற்றிடுக!

## சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2–வது மாபெரும் எழுச்சி மாநாட்டில் தீர்மானம்!....

முதல் பக்கத் தொடர்ச்சி

வளர்ச்சிக்கான முன்னெடுப்புகளையும் மக்களிடம் கொண்டு சேர்த்து, ஒவ்வொரு குடும்பமும் அரசாங்கத்தின் திட்டங்களால் பயன்பெறும் வகையில், சிறப்பான நிர்வாக ஆற்றலை வெளிப்படுத்தி வரும் முதலமைச்சர் அவர்களின் எண்ணப்படி இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு பெயர் பெறவும், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தொடர்ந்திடவும், கழக இளைஞர் அணி அயராது பாடுபடும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 3

**மகளிர் வாழ்வில் தன்னம்பிக்கையை வளர்க்கும் விடியல் பயணம்!**

கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் திட்டங்கள் பலவும் இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும், தமிழ்நாட்டின் அடியொற்றி, பல மாநிலங்கள் பின்பற்றுகிற வகையிலும் புகழ் பெற்றுள்ளன. முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தலைமைச் செயலகத்திற்குச் சென்றவுடனேயே மகளிருக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் என்ற மகத்தானத் திட்டத்திற்குக் கையெழுத்திட்டார் கழகத் தலைவர் அவர்கள். மகளிருடன், திருநங்கையர், மாற்றுத் திறனாளிகள், அவருக்குத் துணை வருவோர் ஆகியோருக்கும் கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் அளித்ததன் மூலம் 2023 டிசம்பர் மாதம் வரை இந்த விடியல் பயணம் திட்டத்தில் 404 கோடியே 6 லட்சம் முறை மகளிர் பயணம் மேற்கொண்டுள்ளனர். திருநங்கையர் 24 லட்சத்து 43 ஆயிரம் முறையும், மாற்றுத்திறனாளிகள் 3 கோடியே 17 லட்சத்து 27 ஆயிரம் முறையும் பயணங்கள் மேற்கொண்டுள்ளனர். இந்த விடியல் பயணத் திட்டம் தமிழ்நாட்டுப் பெண்களின் பயணச் செலவை மிச்சப்படுத்தி, மாதந்தோறும் சராசரியாக 1000 ரூபாய் அளவுக்கு சேமிப்பினை உயர்த்தியிருப்பதுடன், வேலைக்கான நேர்காணல் சந்தைக்குச் சென்று பொருட்களை விற்றல் உள்ளிட்ட வேலை வாய்ப்புகளைத் தன்னம்பிக்கையுடன் தொடங்குவதற்கும் உந்துசக்தியாகத் திகழ்கிறது. பாலின சமத்துவம் போற்றும் திராவிட மாடல் அரசின் விடியல் பயணத் திட்டத்தை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 4

**குடும்பத் தலைவியரின் உழைப்பை மதிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!**

குடும்பத்திற்காக வாழ்நாளெல்லாம் பாடுபடும் இல்லத்தரசிகளின் உழைப்பை மதித்துப் போற்றிடும் வகையில், குடும்பத் தலைவியருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் மகத்தான திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைச் செயல்படுத்தி, ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 இலட்சத்து 84 ஆயிரத்து 300 பெண்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் கிடைக்கச் செய்து, இது உதவித் தொகையல்ல, உங்களின் உரிமைத் தொகை என அறிவித்து, காலங்காலமாக உழைத்து வரும் குடும்பப் பெண்களின் உரிமைக்கான மதிப்பை வழங்கி, அவர்கள் தங்களின் அன்றாடச் செலவினை எதிர்கொள்ளும் வகையில் மாதந்தோறும் உரிமைத் தொகை வழங்கி வருவதுடன், இந்த உரிமைத் தொகையைப் பெற இயலாதவர்களில், தகுதி வாய்ந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்துத் தீர்வு காணும் பொறுப்பினை இளைஞர் அணியின் செயலாளர் இளைஞர் நலன்விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களிடம் ஒப்படைத்துள்ள முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 5

**மாணவர்களின் உடல் நலன் காத்து ஊக்கமளிக்கும் காலை உணவுத் திட்டம்!**

பள்ளிகளுக்கு வருகை தரும் மாணவர்களுக்குப் படிப்புடன் உணவு என்பது திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சி ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த நூறாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் மதிய உணவுத் திட்டம், சத்துணவுத் திட்டம், முட்டையுடன் கூடிய சத்துணவு என காலத்திற்கேற்ற முன்னேற்றங்களுடன் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கி வந்த நிலையில், தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு காலை நேரத்தில் ஊட்டமிகு உணவு தேவைப்படுவதை நேரில் அறிந்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என இந்தியாவுக்கே முன்னோடியான திட்டத்தினை 31 ஆயிரத்து 8 அரசு தொடக்கப்பள்ளிகளில் நடைமுறைப்படுத்தி, 18 லட்சத்து 54 ஆயிரம் மாணவர்கள் பயன்பெற்று, உடல்நலனும் ஊக்கத்தினும் பெறுவதற்கு காரணமான முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 6

**நாளைய தலைமுறையை வளர்த்தெடுக்கும் நான் முதல்வன் - புதுமைப் பெண் திட்டங்கள்!**

திராவிட மாடல் ஆட்சியில் சிறந்து விளங்கும் உயர் கல்வியினை மேலும் செழுமைப்படுத்திடும் வகையில், ‘நான் முதல்வன்’ எனும் திட்டத்தின் வாயிலாக மாணவமணிகளுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழில் மற்றும் உயர் தர வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சி ஆகியவற்றை அளித்து, 26 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவமணிகள் கடந்த இரண்டரை ஆண்டுகளில் பலன் பெறச் செய்ததுடன், அரசுப் பள்ளியில் பயின்ற மாணவிகளின் கல்லூரிக் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் ‘புதுமைப் பெண்’ திட்டத்தினைச் செயல்படுத்தி, இதுவரை 2 லட்சத்து 11 ஆயிரத்து 506 மாணவியருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கி அவர்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 7

**மக்களின் உயிர்காக்கும் மருத்துவத் திட்டங்கள்!**

மக்களின் நல்வாழ்வினை உறுதி செய்திடும் வகையில், தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை மாநகரம் முதல் குக்கிராமம் வரை மேம்படுத்தியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அவர் வழியில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சியில் மருத்துவக் கட்டமைப்பு மேலும் மேம்படுத்தப் பட்டிருப்பதுடன் ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் வாயிலாக ஒரு கோடிக்கும் அதிகமானவர்களின் வீடுகளுக்கே நேரில் சென்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்படுவது, விபத்தில் சிக்கியவர்களின் உயிரைக் காப்பாற்றும் ‘இன்னுயிர் காப்போம்’ திட்டத்தின் வாயிலாக, விபத்து ஏற்பட்ட 48 மணி நேரத்திற்குள் உயிர் காக்கத் தேவைப்படும் சிகிச்சைக்கான செலவை அரசே ஏற்கும் என அறிவித்து, 2 இலட்சம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கும் மனிதநேய முதலமைச்சர்கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 8

**நிதி நெருக்கடியிலும் மகிழ்ச்சிப் பொங்க வைத்த பொங்கல் பரிசுத் தொகுப்பு!**

தமிழர் திருநாள் என திராவிட இயக்கத்தால் முன்னெடுக்கப்பட்ட தமிழர்களின் பண்பாட்டு விழாவான பொங்கல் நன்னாளினை தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் அரிசி, சர்க்கரை, முழுக்கரும்பு அடங்கிய தொகுப்புடன் 2 கோடியே 19 இலட்சத்து 71 ஆயிரத்து 113 அரிசி அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசாக ரூ.1,000 வழங்கி, மாநில அரசின் கடுமையான நிதி நெருக்கடிச் சூழலிலும் மக்களின் முகங்களில் மலர்ச்சியை ஏற்படுத்தி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிற நமது முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறது.

### தீர்மானம் 9

**வரலாறு காணாத மழையிலும் மக்களைக் காத்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி!**

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலும் அருகில் உள்ள மாவட்டங்களிலும், தென்தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களிலும் கடந்த 2023 டிசம்பர் மாதத்தில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் பெய்த வரலாறு காணாத மழையினால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என இந்திய ஒன்றிய பிரதமரிடம் முதலமைச்சர் நேரில் கோரிக்கை வைத்தும் புறக்கணிக்கப்பட்ட சூழலில், தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு உரிய அளவில் பேரிடர் நிதி எதுவும் வழங்காத நிலையிலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் துயர் துடைக்கும் வகையில் மாநில அரசின் நிதியிலிருந்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா 6,000 ரூபாய் வழங்கிய கருணையுள்ளம் கொண்ட கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மாநாடு, தனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறது.

### தீர்மானம் 10

**நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞரின் இலட்சிய வழி நடப்போம்!**

நவீனத் தமிழ்நாட்டின் சிற்பியாம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை ஆண்டு முழுவதும் கொண்டாடும் வகையில், பல்வேறு குழுக்களை அமைத்து, பன்முக ஆற்றல் கொண்ட தலைவர் கலைஞரின் புகழுக்குப் பெருமை சேர்க்கும் விழாக்களை நடத்தி வருவதுடன், சென்னை, கிண்டியில் கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை, திருவாரூரில் கலைஞர் கோட்டம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், சென்னை கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், மதுரை அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் என தமிழ்நாடெங்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் போற்றும் நிலையான அமைப்புகளை உருவாக்கித் தந்துள்ள முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு தனது நன்றியினை உரித்தாக்கி, முத்தமிழறிஞர் ஊட்டிய மொழி இன உணர்வுடன் இளைஞர் அணி தன் பயணத்தைத் தொடரும் என்ற உறுதியினை வழங்குகிறது.

### தீர்மானம் 11

**தமிழ்நாட்டை முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக்கிய முதலமைச்சர்!**

முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் வீழ்ச்சியடைந்த தமிழ்நாட்டின் பொருளாதாரம் மற்றும் தொழில் முதலீடுகளை மீட்டெடுக்கும் முயற்சியாக, கடந்த இரண்டாண்டுகளில் மிகப் பெரிய அளவில் முதலீடுகளையும் தொழிற்சாலைகளையும் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்ததுடன், தமிழ்நாடு உலக முதலீட்டாளர் மாநாடு 2024ஐ வெற்றிகரமாக நடத்தி, 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக தமிழ்நாட்டில் உள்ள 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும், மாநிலத்தின் பல பகுதிகளிலும் பரவலான முதலீடுகள் பெருகவும், பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் கிடைத்திடவும் வழிவகைக் கண்டு, ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்கிற பொருளாதார இலக்கை நோக்கி, முதலீட்டாளர்களின் முதல் முகவரியாக தமிழ்நாட்டைப் புதிய பாய்ச்சலுடன் முன்னேறிடச் செய்யும், முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த மாநாடு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

> **தமிழ்நாடெங்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் போற்றும் நிலையான அமைப்புகளை உருவாக்கித் தந்துள்ள முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்த மாநாடு தனது நன்றியினை உரித்தாக்கி, முத்தமிழறிஞர் ஊட்டிய மொழிஇன உணர்வுடன் இளைஞர் அணி தன் பயணத்தைத் தொடரும் என்ற உறுதியினை வழங்குகிறது.**

### தீர்மானம் 12

**இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக தமிழ்நாட்டை மாற்றிவரும் அமைச்சர்**

செஸ் ஒலிம்பியாட் முதல், கேலோ இந்தியா வரை தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக்கும் வகையில் பன்னாட்டுத் தரத்துடன் பல போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி வருவதுடன், தமிழ்நாட்டு இளைஞர்கள் இளம்பெண்கள் ஆகியோரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், மாவட்டங்கள் தோறும் விளையாட்டரங்குகள், போட்டிகள் ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக மேற்கொண்டு வரும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் அயராத முயற்சிகளை இம்மாநாடு பாராட்டுவதுடன், உலகளாவிய போட்டிகளில் பதக்கம் வெல்லக்கூடிய வகையில், தமிழர்களை ஊக்குவிக்கும் பயிற்சிகளை கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

> **தமிழ்நாட்டு இளைஞர்கள், இளம்பெண்கள் ஆகியோரின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், மாவட்டங்கள் தோறும் விளையாட்டரங்குகள், போட்டிகள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக மேற்கொண்டு வரும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் அவர்களின் அயராத முயற்சிகளை இம்மாநாடு பாராட்டுவதுடன், உலகளாவிய போட்டிகளில் பதக்கம் வெல்லக்கூடிய வகையில், தமிழர்களை ஊக்குவிக்கும் பயிற்சிகளை கழக இளைஞர் அணி முன்னெடுக்கும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.**

### தீர்மானம் 13

**உயிர்பலி நீட் நுழைவுத் தேர்வை ஒழிக்கும் வரை போராட்டம் ஓயாது!**

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கனவை சிதைத்துத் தங்கை அரியலூர் அனிதா முதல் சென்னை ஜெகதீஸ்வரன் வரை 22 உயிர்களைப் பறித்துள்ள நீட் தேர்வு, ராஜஸ்தான் உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் பல மாணவர்களின் உயிர்களைப் பறித்து வருவதுடன், ஒன்றிய பா.ஜ.க அரசின் ஆதரவு பெற்ற பயிற்சி நிறுவனங்கள், ஒவ்வொரு மாணவரிடமும் லட்சக் கணக்கில் கட்டணம் வசூலித்து கொள்ளை லாபம் அடைவதற்கு மட்டுமே துணை போகிறது என்பதால், நீட் தேர்வை ரத்து செய்யும் வரை திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து போராடும் என்கிற உறுதியினை வழங்கி, 2021 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க அளித்த வாக்குறுதியின்படி, நீட் தேர்வை ரத்து செய்யும் சட்ட முன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களின் பேராதரவுடன் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு இரண்டு முறை நிறைவேற்றியும், ஜனநாயக மாண்புகளை மதிக்காமல் செயல்பட்ட தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், நீட் விலக்கு கோரி தமிழ்நாடு முழுவதும் 2023 ஆகஸ்ட் 20 அன்று உண்ணா நிலை அறப்போரை முன்னெடுத்த இளைஞர் அணி, அதனைத் தொடர்ந்து நீட் விலக்குநம் இலக்கு என்ற முழக்கத்துடன் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் முதல் கையெழுத்துடன் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நேரடியாகவும் ஆன்லைனிலும் நடத்தி, நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 50 இலட்சம் கையெழுத்துகளுக்கும் அதிகமாகப் பெற்று மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றிக் காட்டியுள்ள நிலையில், நீட் ஒழிக்கப்படும்வரை ஜனநாயக முறையிலான போராட்டங்களையும், சட்ட வழியிலான போராட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுத்து, மாணவர்களின் எதிர்காலத்தைப் பலி கொடுக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் கொடூர மனப்பான்மையை இந்திய அளவில் அம்பலப்படுத்தி, நீட் தேர்வு ஒழிப்பில் இறுதி வெற்றியை முழுமையாகப் பெற்றே தீரும் என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 14

**குலக்கல்வி முறையைப் புகுத்தும் தேசியக் கல்விக் கொள்கையை எதிர்த்துப் போராட்டம்**

தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பு என்பது தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கல்வி வரை சிறந்து விளங்குவதுடன், தர வரிசையில் இந்தியாவின் முதல் 100 உயர் கல்வி நிறுவனங்களில் 18 தமிழ்நாட்டைச் சேர்ந்தவையாக இருப்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. உயர்கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் (ஜி.இ.ஆர்.) 51.4 விழுக்காடாக உள்ளது. இது இந்திய சராசரி அளவை விட மிக அதிகமாகும். இத்தகைய கல்விப்புலம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள நிலையில், தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரால் தமிழ்நாட்டின் கல்விக் கட்டமைப்பைச் சிதைப்பது, இந்தி சமஸ்கிருத மொழிகளைத் திணிப்பது, தொழிற்கல்வி என்ற பெயரிலும் விஸ்வகர்ம யோஜனா என்ற பெயரில் குலக்கல்வி முறையைக் கொண்டு வருவதும் சமூக நீதிக்கு முற்றிலும் எதிரானது என்பதால், தேசிய கல்விக் கொள்கையைக் கழக இளைஞர் அணி முழுமையாக எதிர்ப்பதுடன், தமிழ்நாட்டில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும் தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போக்கை எதிர்த்து மாணவர் இளைஞர் அமைப்புகளுடன் இணைந்து நாடு தழுவிய அளவிலான போராட்டங்களை இளைஞர் அணி முன்னெடுக்கும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 15

**மாநிலப் பட்டியலுக்குக் கல்வி மருத்துவத்தை மாற்றுக!**

நீட் தேர்வு, முதுநிலை மருத்துவப் படிப்பில் அகில இந்திய இடங்களுக்கான இடஒதுக்கீடு, தேசிய கல்விக் கொள்கை வாயிலாக இந்தி ஆதிக்கம் என பள்ளிக் கல்வி முதல் உயர்கல்வி வரை அனைத்திலும் ஒன்றிய அரசின் ஆதிக்கம் நீடிப்பது என்பது அந்தந்த மாநிலத்தின் மொழி பண்பாடுதிறன் மேம்பாடு ஆகியவற்றைச் சிதைக்கும் நோக்கத்தில் இருப்பதாலும், இது ஜனநாயக நெறிமுறைகளுக்கு நேரெதிரானது என்பதாலும், பொதுப்பட்டியலில் உள்ள கல்வியையும் மருத்துவத்தையும் மாநிலப் பட்டியலுக்கு மாற்றிட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அதற்கான சட்ட வழிமுறைகளை இளைஞர் அணி முன்னெடுக்கும் என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 16

**முதலமைச்சரே பல்கலைக்கழக வேந்தர்**

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்கள் உயர்கல்வியிலும் ஆராய்ச்சிக் கல்வியிலும் தனித்துவத்துடன் திகழ்ந்து வரும் நிலையில், பல்கலைக் கழகங்களின் வேந்தர் பொறுப்பு ஒன்றிய பா.ஜ.க. அரசினால் நியமிக்கப்படும் ஆளுநர்களின் தன்னிச்சையான போக்கினால் பெரும் பாதிப்புக்குள்ளாவதுடன், ஊழல் புகார்களும் காவிமயமாக்கும் தன்மையும் அதிகரித்து வருகின்றன கல்வியில் மதவாதம் வெறுப்புணர்வு, நிர்வாகத்தில் ஜனநாயக விரோதம்ஊழல் ஆகியவைத் தொடர்ந்து கொண்டிருப்பதால், தமிழ்நாட்டின் செம்மையான உயர்கல்வி ஆராய்ச்சிக் கல்வி நீடித்திட, பல்கலைக் கழக வேந்தர் எனும் உயர் பொறுப்புக்கு, நியமனப் பதவியில் உள்ள ஆளுநருக்குப் பதிலாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முதலமைச்சரே தகுதியானவர் என்பதால், பல்கலைக்கழக வேந்தராக முதலமைச்சர் அவர்கள் செயல்படுவார் என்கிற தமிழ்நாடு அரசின் சட்ட முன்வடிவை இளைஞர் அணி ஆதரிப்பதுடன், அதனை விரைந்து நிறைவேற்றிட, இந்த மாநாடு வலியுறுத்துகிறது.

### தீர்மானம் 17

**ஆளுநர் பதவியை நிரந்தரமாக அகற்றிடுக!**

மக்களாட்சியின் மாண்பு என்பது ஜனநாயகப் பூர்வமான தேர்தல் களத்தில் வாக்காளர்களாகிய மக்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் வெற்றிபெற்ற மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றத்தின் சுயாட்சி மிக்கச் செயல்பாடுகளேயாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை, குறிப்பாக, பா.ஜ.க. ஆட்சியில்லாத மாநில அரசுகளை, நியமனப் பதவியான ஆளுநர் பதவியைக் கொண்டு செயல்படவிடாமல் தடுக்க முயற்சித்து, ஆளுநர்களைக் கொண்டு இணை அரசாங்கம் நடத்துவதற்குத் திட்டமிடும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோதப் போக்கினைக் கண்டிப்பதுடன், ஆளுநர் பதவி என்ற `தொங்கு சதை’யை நிரந்தரமாக அகற்றுவதே, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான தீர்வு என இம்மாநாடு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 18

**தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு வேலைகளில் தமிழர்களை நியமித்திடு!**

இந்திய ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் ஒன்றிய அரசு அலுவலகங்கள் ஆகியவற்றில் அந்தந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நிலையை, முற்றிலுமாக மாற்றிய 10 ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டில் அமைந்துள்ள தென்னக ரயில்வே, என்.எல்.சி, பி.ஹெச்.இ.எல்., ஆவடி கன ரக வாகனத் தொழிற்சாலை, ராணுவ ஆடைத் தயாரிப்பு நிறுவனம், ரயில் பெட்டித் தொழிற்சாலை மற்றும் தமிழ்நாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் தேசிய வங்கிகளான இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றில் தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டு, பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்களைத் திட்டமிட்டுத் திணிக்கும் முயற்சியை மேற்கொண்டு வருவதன் மூலம், தமிழ்நாட்டு இளைஞர்களை வஞ்சிப்பதுடன், பிற மாநிலத்தவருடன் பகையுணர்வை வளர்க்கும் போக்கையும் மேற்கொண்டு வருவதை வன்மையாகக் கண்டிப்பதுடன், தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு சார்ந்த நிறுவனங்கள், அலுவலகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தகுதியான ஆண்பெண் விண்ணப்பதாரர்களுக்கே முன்னுரிமை அளித்துப் பணியிடங்களில் நியமித்திட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் பொதுத்துறை நிறுவனங்களிலும் ர்இட ஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

**ஜம்மு - காஷ்மீருக்கு மீண்டும் மாநில தகுதி வழங்க வேண்டும்!**

**தமிழ்நாட்டில் ஒன்றிய அரசு வேலைகளில் தமிழர்களை நியமித்திடுவீர்!**

**பா.ஜ.க.வை வீழ்த்தும் முன்கள வீரர்களாக இளைஞர் அணி செயல்படும்!**

# கலைஞரின் மாநில சுயாட்சித் தீர்மானத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிகாரத்தை வலிமைப்படுத்த வேண்டும்!

## சேலத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2–வது மாபெரும் எழுச்சி மாநாட்டில் தீர்மானம்!.... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

தீர்மானம் 19

**மாநிலங்களின் அதிகாரங்களைப் பறிக்கும் ஒன்றிய அரசுக்குக் கண்டனம்**

இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு ஆட்சிக் காலத்தில் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. பின்னர் பொறுப்புக்கு வந்த பிரதமர்களின் ஆட்சிக்காலங்களில் யூனியன் பிரதேசங்கள் பலவும் மாநிலங்களாகத் தகுதிபெற்றன. பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் ஜார்கண்ட், உத்தரகாண்ட், சத்தீஸ்கர் உள்ளிட்ட மாநிலங்கள் உருவாகின. பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்தில் தெலங்கானா மாநிலம் உருவானது. ஒவ்வொரு ஆட்சியிலும் மாநில அந்தஸ்து என்பது மதிப்பு வாய்ந்ததாக இருந்தது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில், இந்திய வரைபடத்தின் தலைப்பகுதியில் உள்ள மாநிலமான ஜம்முகாஷ்மீர் தனக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்புரிமைகளை இழந்ததுடன் மாநிலம் என்ற தகுதியையும் இழந்து, இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிளக்கப்பட்டிருக்கிறது. மாநிலத் தகுதியை ஒரு நிலப்பகுதி இழக்கும்போது, அது ஆளுநர் அல்லது துணை நிலை ஆளுநர் எனும் ஒன்றிய அரசின் நிர்வாகப் பொறுப்பின் அதிகாரத்திற்கு ஆட்படுவதும், யூனியன் பிரதே சங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைந்தால்கூட ஆளுநர்கள் அதனை ஆட்டிப்படைப்பதையும் அருகிலுள்ள புதுச்சேரி உள்படப் பல யூனியன் பிரதேசங்களில் பார்க்கிறோம். எனவே, ஜம்முகாஷ்மீருக்கு மீண்டும் மாநிலத் தகுதி வழங்கப்பட வேண்டும் என்றும், மாநிலங்களை நகராட்சிகளைப் போல நடத்த நினைக்கும் ஒன்றிய பா.ஜக. அரசின் வல்லாதிக்கப் போக்கைக் கண்டித்தும் இந்த மாநில உரிமை முழக்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

தீர்மானம் 20

**கலைஞரின் மாநில சுயாட்சித் தீர்மானத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கிடுக!**

மாநிலங்களின் ஒன்றியமாகத் திகழும் இந்தியா, உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நோக்கி முன்னேற வேண்டுமென்றால், மாநில அரசுகள் வலிமை கொண்டவையாகத் திகழ வேண்டும் என்ற நோக்கத்துடன் 1969ஆம் ஆண்டு முதன் முதலாக முதலமைச்சரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நீதியரசர் ராஜமன்னார் தலைமையிலான குழுவை அமைத்து, அதன் பரிந்துரைகளைப் பெற்று, ஆலோசனைகள் மேற்கொண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1974 ஆம் ஆண்டில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து இந்தியாவின் பல மாநிலங்களிலும் மாநில சுயாட்சிக்கான குரல் ஒலித்து வருகிறது. கூட்டாட்சி அடிப்படையிலான இந்திய ஒன்றிய அரசு, சுயாட்சிமிக்க மாநில அரசுகள் என்பதே ஜனநாயகத்தை வலிமைப்படுத்தும். அதிகாரக் குவிப்பைத் தகர்த்து, அதிகார பரவலாக்கத்தை முன்னெடுக்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய மாநில சுயாட்சி தீர்மானத்தின் அடிப்படையில், தற்போதைய தேவைகளையும் இணைத்து, மாநில அரசுகளின் அதிகாரத்தை வலிமைப்படுத்திட வேண்டும் என்று இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

தீர்மானம் 21

**அமலாக்கத்துறை உள்ளிட்ட அமைப்புகளைக் கைப்பாவையாக்கிய ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்!**

ஜனநாயக நாட்டில் மக்களின் கடைசி நம்பிக்கை சட்டமும் நீதியும்தான். புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அடையாளத்துக்காக ஒரு செங்கோலை வைத்துவிட்டு, சட்டம் நீதியின் ஆட்சி எனும் உண்மையான செங்கோலை, வில்லாக வளைத்து, அதில் தனது கைப்பாவையாக மாற்றி வைத்துள்ள அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமானவரித்துறை போன்ற அம்புகளைத் தொடுத்து, பா.ஜ.க. அல்லாத ஆட்சி நடைபெறும் மாநிலங்களில் உள்ள ஆளுங்கட்சியினர் மீதும், பா.ஜ.க.வை எதிர்க்கின்ற கட்சிகள் மீதும் வன்மத்துடன் பாய்ச்சுகின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் அரசியல் போக்கிற்கும், ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளானவர் பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலை எடுத்தால், அவர் மீதான வழக்குகளில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ‘தூய்மைப் பட்டம்’ அளிக்கும் ‘வாஷிங் மெஷின் பா.ஜ.க.’ அரசின் இரட்டை வேட செயல்பாடுகளுக்கும் இந்த மாநாடு வன்மையானக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.

**அமலாக்கத்துறை, மத்திய புலனாய்வுத்துறை, வருமானவரித்துறை போன்ற அம்புகளைத் தொடுத்து, பா.ஜ.க. அல்லாத ஆட்சி நடைபெறும் மாநிலங்களில் உள்ள ஆளுங்கட்சியினர் மீதும், பா.ஜ.க.வை எதிர்க்கின்ற கட்சிகள் மீதும் வன்மத்துடன் பாய்ச்சுகின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் பழிவாங்கும் அரசியல் போக்கிற்கும், ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளானவர் பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலை எடுத்தால், அவர் மீதான வழக்குகளில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ‘தூய்மைப் பட்டம்’ அளிக்கும் ‘வாஷிங் மெஷின் பா.ஜ.க.’ அரசின் இரட்டை வேட செயல்பாடுகளுக்கும் இந்த மாநாடு வன்மையானக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறது.**

தீர்மானம் 22

**நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் சர்வாதிகாரத்தை ஒழித்திடுவோம்!**

ஒன்றிய ஆளுங்கட்சியின் எதேச்சதிகார செயல்பாடுகளை ஜனநாயகத்தின் உயர்ந்த இடமான நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்ட காரணத்தால், இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு, ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை நோக்கி ஒரே கூட்டத் தொடரில் 146 மக்களவை–மாநிலங்களவை எதிர்க்கட்சி உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து, ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்துள்ள பா.ஜ.க. அரசின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டிப்பதுடன், 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் இத்தகைய சர்வாதிகார சக்திகளை முழுமையாக வீழ்த்திட, இந்த மாநாடு உறுதியேற்கிறது.

## “ஹிட்லரின் தோல்வி ஸ்டாலினிடம்தான்” என்ற வரலாற்றை நிரூபிக்க ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டுவோம்!

தீர்மானம் 23

**இந்துக்களின் உண்மையான எதிரி பா.ஜ.க.தான் என்பதை அம்பலப்படுத்துவோம்.**

10 ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் சமையல் சிலிண்டர் விலை, பெட்ரோல் டீசல் விலை ஆகியவற்றைக் கடுமையாக உயர்த்தி, மக்களை வாட்டி வதைப்பதும், அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வதாரத்தைப் பாதிக்கச் செய்ததுமே வேதனை மிகுந்த சாதனைகளாக இருக்கின்றன. ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்காகும் என்ற வாக்குறுதியும் நிறை வேற்றப்படவில்லை. கறுப்புப் பணத்தை ஒழிப்பதாகக் கூறி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையால், ஏழை எளிய மக்களை நடுஇரவில் நடுரோட்டில் நிறுத்திய ஒன்றிய பா.ஜக. அரசு, கறுப்புப் பணத்தையும் ஒழிக்கவில்லை, கறுப்புப் பணத்தை ஒழித்து, ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் 15 இலட்ச ரூபாய் போடுவதாகக்கூறி, சல்லிப் பைசாவையும் போடவில்லை. தனது வாக்குறுதிகள் அனைத்திலும் தோல்வியடைந்த பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க அரசு, மக்களுக்குச் செய்த துரோகங்களை மறைக்க, மதவாத அரசியலை முன்னெடுத்து, அயோத்தி இராமர் கோவிலை வைத்து வாக்குகள் பெற்றுவிடலாம் என நினைப்பது ஆன்மிகவாதிகளையும் ஏமாற்றும் செயலாகும். நாட்டில் உள்ள இந்துக்களில் பெரும்பான்மையான மக்களை 10 ஆண்டுகாலமாக ஏமாற்றிவிட்டு, இராமர் கோவிலைக் காட்டி, இந்துக்கள் ஓட்டுகளை வாங்கி விடலாம் என அரசியல் கணக்குடன், கடவுளையும் ஏமாற்ற நினைக்கும் இந்து மக்களின் உண்மையான எதிரியான பா.ஜ.க.வின் மதவாத அரசியலை வீடு வீடாக அம்பலப்படுத்தும் பரப்புரையை இளைஞர் அணி மேற்கொள்ளும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

## இந்துக்களின் உண்மையான எதிரி பா.ஜ.க.தான் என்பதை பரப்புரையில் இளைஞர் அணி அம்பலப்படுத்தும்!

தீர்மானம் 24

**பா.ஜ.க ஆட்சியை வீழ்த்திடும் முன்கள வீரர்களாக இளைஞர் அணி செயல்படும்!**

கலவரத் தீயில் அரசியல் குளிர்காய்வதற்காக, மக்களை விறகுக் கட்டைகள் போல எரிக்கும் தன்மையுடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுகிறது என்பதற்கு, ஆண்டுக்கணக்கில் பற்றி எரியும் மணிப்பூர் மாநிலக் கலவரமும், அந்த இடத்திற்கு இந்திய ஒன்றிய பிரதமர் அவர்கள் இதுநாள்வரை நேரில் செல்லாமல் தவிர்த்து வருவதுமே சான்றாகும். நாடு முழுவதும் மதவெறி, வெறுப்பரசியல், மாநில உரிமைகள் பறிப்பு, அரசியல் பழிவாங்கல், சிறுபான்மையினர் மனங்களில் அச்சத்தை விதைத்தல், உணவு அரசியல், நவீனத் தீண்டாமை, மொழி ஆதிக்கம் உள்ளிட்டவற்றைத் தீவிரப் படுத்தி, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் பன்முகத்தன்மைக்கும் எதிரான கொள்கைகளால் பத்தாண்டு காலம் மக்களின் அடிப்படைப் பிரச்சினை களுக்குத் தீர்வு காணாமல், இந்தியாவைச் சீர்கெடச் செய்து வருவதுடன், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க. ஆட்சியை அடியோடு வீழ்த்திட, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுக்கும் தேர்தல் களங்கள் அனைத்திலும் இளைஞர் அணி முன்களப் போர்வீரர்களாகச் செயல்படும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.

**நாடு முழுவதும் மதவெறி, வெறுப்பரசியல், மாநில உரிமைகள் பறிப்பு, அரசியல் பழிவாங்கல், சிறுபான்மையினர் மனங்களில் அச்சத்தை விதைத்தல், உணவு அரசியல், நவீனத் தீண்டாமை, மொழி ஆதிக்கம் உள்ளிட்டவற்றைத் தீவிரப்படுத்தி, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கும் பன்முகத்தன்மைக்கும் எதிரான கொள்கைகளால் பத்தாண்டு காலம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல், இந்தியாவைச் சீர்கெடச் செய்து வருவதுடன், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க. ஆட்சியை அடியோடு வீழ்த்திட, முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னெடுக்கும் தேர்தல் களங்கள் அனைத்திலும் இளைஞர் அணி முன்களப் போர்வீரர்களாகச் செயல்படும் என இந்த மாநாடு தீர்மானிக்கிறது.**

தீர்மானம் 25

**நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றத்திற்கான சூளுரை**

சமூக நீதி, மத நல்லிணக்கம், சமத்துவம் , மாநிலங்களின் உரிமைகள்தாய்மொழி வளர்ச்சி, பரவலான பொருளாதாரக் கட்டமைப்பு, மனித உரிமை இவற்றைக் கொள்கைகளாகக் கொண்ட இயக்கங்களின் ஒருங்கிணைப்பான ‘இந்தியா’ கூட்டணியை உருவாக்குவதிலும், வழிகாட்டுவதிலும் முன்னணி பங்காற்றி வருபவரும், மனிதநேய சக்திகளை ஒன்றிணைத்தால், பாசிசத்தை வீழ்த்திக் காட்ட முடியும் என 2019 நாடாளுமன்றத் தேர்தலிலேயே தமிழ்நாட்டில் வெற்றிகரமாக நிரூபித்துக் காட்டியவருமான திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில், இயங்கும் கழக இளைஞர் அணி, கழகத் தலைவரின் கட்டளைக்கேற்ப 2024 நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் முன்னின்று செயலாற்றி, தமிழ்நாடு–புதுச்சேரியில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியின் வெற்றிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, ‘ஹிட்லர்களின் தோல்வி ஸ்டாலினிடம்தான்’ என்ற வரலாற்று மரபின் தொடர்ச்சியை நிரூபிக்கும் வகையில், இந்திய ஒன்றியத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டும் எனச் சூளுரைக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி சிவகங்கை மாவட்டம்

## கண்டுபட்டி கிராமத்தில் மஞ்சு விரட்டு - சமத்துவப் பொங்கல்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை. ஜனவரி 22 -

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தாலுகா கண்டுபட்டியில் தை மாதம் 5ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் மஞ்சுவிரட்டு நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு 19ம் தேதி வெள்ளிக்கிழமை மஞ்சுவிரட்டு நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் கொடி அசைத்து மஞ்சு விரட்டு துவக்கி வைத்தார்.

130க்கும் மேற்பட்ட காளைகளும் 49 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றார்கள். முன்னதாக மாடுபிடி வீர்கள் மாட்டின் உரிமையாளர்கள் மாவட்ட ஆட்சியர் தலைமையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.சிறப்பாக காளை மாட்டினை பிடித்த மாடுபிடி வீரர்களுக்கும், மாட்டு உரிமையாளர்களுக்கும் பரிசுகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கிபாராட்டினார்.

இந்த மஞ்சுவிரட்டில் தென்மாவட்டங்களிலிருந்து ஏராளமான மாடுகள் பங்கேற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் மோகன சந்திரன், திருப்புவனம் பேரூராட்சிமன்ற தலைவர் த. சேங்கை மாறன், காளையார் கோவில் வட்டாட்சியர் ராஜரத்தினம், ஒன்றிய செயலாளர்கள் ஆர்.எம். கென்னடி,யோக.கிருஷ்ண குமார், வே.ஆரோக்கிய சாமி, ஒன்றியதுணை செயலாளர் முத்துக்குமார், கண்டுபட்டி மஞ்சுவிரட்டு ஒருங்கிணைப்பாளர் பில்லப்பன், மற்றும் சுற்று வட்டார கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

மாவட்ட காவல் கண்காணிப் பாளர்பி.கே. அரவிந்த் உத்தரவின் பேரில் சிவகங்கை டி.எஸ்.பி. சிபிசக்கரவர்த்தி தலைமையில் 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

முன்னதாக தேவாலயத்தில் சிறப்பு பிரார்த்தனை வழிபாடுகள் பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. 500க்கும் மேற்பட்டவர்கள் பொங்கல் வைத்து வழிபட்டனர். இந்துக்கள், கிறிஸ்து வர்கள், முஸ்லிம்கள் என்று அனைத்து சமூகத்தினர் ஒன்றாக பொங்கல் விழாவில் கலந்து கொண்டார்கள்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.01.2024) சேலம் மாவட்டம், ஏத்தாப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிய 108 ஆம்புலன்ஸ் சேவையினைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். உடன் இணை இயக்குநர் நலப்பணிகள் (பொ) மரு.மு.வளர்மதி, துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு.ச.சௌண்டம்மாள், மாநகர் நல அலுவலர் மரு.ந.யோகானந்த் உள்ளிட்ட தொடர்புடைய வட்டார மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளனர்.

---

## தமிழ்நாட்டிற்கு - இந்தியாவிற்கு பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்லும்!

### இளைஞரணி மாநாட்டிற்கு திருமதி சோனியா காந்தி - சரத்பவார் - கட்சித் தலைவர்கள் வாழ்த்துச் செய்தி!

**புதுடெல்லி, ஜன. 22-**

**தி.மு.க. இளைஞரணி மாநில மாநாடு, தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி நம்மை அழைத்து செல்லும் என்ற நம்பிக்கை உள்ளதாக காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் சோனியா காந்தி, மல்லிகார்ஜூன கார்கே, சரத்பவார் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சித் தலைவர் சோனியா காந்தி வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

நாட்டின் கூட்டாட்சி கட்டமைப்பை வலுப்படுத்த இளைஞர்களின் பங்களிப்பிற்காக, சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முன்முயற்சியாக தி.மு.க. இளைஞரணி மாநாடு அமைந்துள்ள தாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாநில உரிமைகளை மீட்பது குறித்து ஆழமாக ஆலோசிப்பது கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு நல்வழி காட்டும் என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

கூட்டாட்சி மற்றும் ஒன்றிய - மாநில உறவுகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் விதமாக மாநாடு உள்ளதாக தேசியவாத காங்கிரசின் தலைவர் சரத்பவார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மாநில உரிமை மூலம் முக்கிய அரசியல் பொறுப்பை திமுக இளைஞரணி ஏற்றுள்ளதாக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தின் மதிப்புகளுக்கு மேலும் வலு சேர்க்கும் மாநாடாக திமுக இளைஞரணி மாநாடு அமையட்டும் என்று ஒடிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் வாழ்த்து கூறியுள்ளார்.

இதேபோல், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களும் திமுக இளைஞரணி மாநாட்டுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

---

## யூடியூப் சேனல் உருவாக்குதல் பயிற்சி!

சென்னை, ஜன.22–

உங்களது சொந்த யூடியூப் சேனலை உருவாக்குதல் மற்றும் இணையதளத்தில் யூடியூப் சேனலை பயன்படுத்தி உங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்துதல் குறித்த மூன்று நாள் பயிற்சி 29–ஆம் தேதி தொடங்குகிறது.

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னையில், உங்களது சொந்த யூடியூப் சேனலை உருவாக்குதல் மற்றும் இணையதளத்தில் யூடியூப் சேனலை பயன்படுத்தி உங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்தல் குறித்த பயிற்சி வரும் 29.01.2024 முதல் 31.01.2024 தேதி வரை காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் யூடியூப் சேனலை உருவாக்குவது எப்படி, வீடியோ மற்றும் ஸ்லைடு ஷோ உருவாக்கம், சமூக ஊடக சந்தைப்படுத்தல், சமூக ஊடகங்களை இணைத்தல், வாடிக்கையாளர் நெட்வொர்க்கை எவ்வாறு அதிகரிப்பது, பயனுள்ள சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு ஆன்லைன் மார்க்கெட்டிங் மற்றும் விதிகள் ஆகியவற்றை விரிவாக விளக்கி டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் ஆர்வமுள்ள தொழில் முனை வோர் (ஆண்/பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10வது வகுப்புடன் வி ண்ணப்பிக்கலாம்

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www. editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி / கைபேசி எண்கள்.

தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, இடிஐஐ அலுவலக சாலை ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032. 4422252081/ 22252082, 8668102600 / 8668100181 / 7010143022.

முன்பதிவு அவசியம்:

அரசு சான்றிதழ் வழங்கப்படும்

## அலை அலையென இலட்சோப இலட்சம் பேர் திரண்டனர்!

# சேலத்தை குலுக்கிய இளைஞர் அணி எழுச்சி மாநாடு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி - பாராட்டு!

## மாநாட்டுத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் 25 தீர்மானங்களை நிறைவேற்றினார்!



**சேலம், ஜன. 22-**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று, முன்னின்று நடத்திய, “தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு” மாநில உரிமை மீட்பு முழக்க மாநாடாக, நேற்று (ஜனவரி 21 - 2024 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் - பெத்த நாயக்கன் பாளையத்தில் எழுச்சியும் உணர்ச்சியும் நிறைந்ததாக மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்றது.**

**இந்த இளைஞர் அணி மாநாட்டில் அலை அலையென திரண்ட இலட்சோப இலட்ச இளைஞர் அணி செயல்வீரர்களால் சேலம் மாநகரமே குலுங்கியது.**

**‘இளைஞர் அணி’ எனும் கழகத்தின் ஈடு இணையற்ற அமைப்பை, ஊண் உறக்கம் மறந்து, இத்தனை ஆண்டுகளாய் தம் தோளில் சுமந்து, அதன் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும், அசைவிலும் தமது பேருழைப்பைச் சிந்தி நெறிப்படுத்தி வளர்த்தெடுத்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றினார்! அப்பேருரையில் இளைஞர் அணி எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகளுக்கு வியூகங்கள் வகுத்தளித்தார்.**

**முன்னதாக கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையும் - கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் வாழ்த்துரையும் - கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள், ‘மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்’ உரையும் நிகழ்த்தினர். கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கழகக் கொடியேற்றி வைத்து உரையாற்றினார்.**

**மாநாட்டில் பல்வேறு சிறப்புக்குரிய தலைப்புகளில் கழக முன்னோடிகளும், கழகத்தின்பால் பேரன்பு கொண்ட பெருமக்களும் சீர்மிகு உரையாற்றினர்.**

**இம்மாநாட்டில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு சமூக நீதி உள்ளிட்ட கொள்கைகளை பறைசாற்றும் 25 வரலாற்று தீர்மானங்களை கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் படித்த அத்தீர்மானங்கள் லட்சோப லட்ச இளைஞர்கள் மக்களின் கரவொலிக்கிடையே நிறைவேற்றப்பட்டன.**

**இம்மாநாட்டிற்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி உள்ளிட்ட பல்வேறு தேசிய கட்சித் தலைவர்கள் முன்னணியினர் வாழ்த்துத் தெரிவித்து இருந்தனர்.**

இம்மாநாடு பற்றிய விபரம் வருமாறு:-

“தி.மு.க. இளைஞர் அணியின் 2வது மாநில மாநாடு” நேற்று (ஜனவரி 21 - ஞாயிற்றுக்கிழமை) சேலம் - பெத்த நாயக்கன்பாளையத்தில் நடை பெற்றது.

மாநாட்டுப் பந்தலுக்கு - ‘தந்தை பெரியார்’ பெயரில் நுழைவாயில்,

திடலுக்குப் பெயரோ, அண்ணா திடல்,

கலைஞர் அரங்கம்,

பேராசிரியர் மேடை,

வீரபாண்டியார் கொடி மேடை,

முரசொலி மாறன் புகைப்படக் கண்காட்சி,

வீரபாண்டி ஆ.ராஜா, வீரபாண்டி செழியன், சந்திரசேகர், ‘நீட்’ போராளிகள் அனிதா மற்றும் தனுஷ் ஆகியோர் பெயர்களால் தோரண வாயில்கள் என, - மாநாட்டின் ஒவ்வொரு ஏற்பாடும் உணர்ச்சியும், பொருளும் மிக்கதாய் அமைக்கப்பட்டிருந்தது.

காலை 9.00 மணியளவில் கழகக் கொடியேற்றலுடன் மாநாடு தொடங்கியது.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், கழகக் கொடியினை ஏற்றிவைத்தார்.

பின்னர், மாநாட்டு திடலில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவ சிலைகளை திறந்துவைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

இம்மாநாட்டில் வரலாற்று சிறப்பு மிக்க கொள்கை விளக்க 25 தீர்மானங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒவ்வொரு தீர்மானமாக படித்திட 25 தீர்மானங்கள் நிறைவேற்றும் வகையில் மாநாட்டில் குழுமி இருந்த லட்சோப லட்ச - இளைஞர் அணியினர் - கழகத்தினர் - பொதுமக்கள் கரவொலி எழுப்பி தீர்மானங்களை வரவேற்றிட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் - கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் வரவேற்புரையாற்றினார்.

**மாநாட்டுத் திறப்பாளர் உரை!**

காலை 9.45 மணியளவில் - இம்மகத்தான மாநாட்டின் தலைவராக, இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முன்மொழிதலும் வழிமொழிதலும் நடைபெற்றது.

காலை 10.00 மணியளவில், கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள், ‘மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்’ உரை நிகழ்த்தினார்.

10.15 மணியளவில் - அரசு கொறடா கோவி.செழியன், மொழிப்போர்த் தியாகிகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

10.30 மணியளவில், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ‘மாநாட்டுத் திறப்பாளர்’, உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வுகளை அடுத்து காலை 11.00 மணிக்குத் தொடங்கி, மாலை 6.00 மணிவரை, உணர்ச்சியும் எழுச்சியும் மிக்க பல்வேறு தலைப்புகளில் ‘சொற்பொழிவரங்கம்” நடைபெற்றது. இதில்

**இளைஞர் அணி கண்ட களங்கள் -**
**திருச்சி என்.சிவா எம்.பி.,**

**திராவிட மாடல் - எல்லோருக்கும் எல்லாம் -**
**ஆ.ராசா எம்.பி.,**

**நிதித்துறையில் மாநில உரிமைகள் பறிப்பு-**
**அமைச்சர் தங்கம் தென்னரசு**

**தமிழ்நாட்டின் கல்விப் புரட்சி -**
**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

**மொழிப்போர் - இந்தித் திணிப்பு எதிர்ப்பு -**
**கம்பம் செல்வேந்திரன்**

**திராவிட இயக்க முன்னோடிகள் -**
**முனைவர் சபாபதி மோகன்**

**கலைஞர் பாதையில் நம் தலைவர் -**
**திண்டுக்கல் ஐ.லியோனி**

**மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி -**
**பேராசிரியர் சுப.வீரபாண்டியன்**

**திராவிடம் சொல்லும் மனிதநேயம் -**
**வழக்கறிஞர் அருள்மொழி**

**தலைவர் ஆட்சியில் தொழில்புரட்சி -**
**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**

**கலைஞர் - ஒடுக்கப்பட்டோர் வாழ்வில் ஒளிவிளக்கு -**
**அமைச்சர் மதிவேந்தன்**

**கலைஞரின் பேனா -**
**கரு பழனியப்பன்**

**கழக ஆட்சியில் திறன் மேம்பாடும் வேலை வாய்ப்பும் -**
**எம்.எம்.அப்துல்லா எம்.பி.,**

**மருத்துவக் கட்டமைப்பு - இந்தியாவின் முன்னோடி தமிழ்நாடு -**
**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**

**இலக்கியமும் தி.மு.க.வும் -**
**மனுஷ்யபுத்திரன்**

**அவதூறுகளை அடித்து நொறுக்கிடும் கழகம் -**
**வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா**

**சமூக நீதி -**
**வே.மதிமாறன்**

**பத்திரிகையும் திராவிட இயக்கமும் -**
**கோவி லெனின்**

**நீட் விலக்கு நம் இலக்கு -**
**வழக்கறிஞர் ராஜீவ் காந்தி**

**பெரியாரும் பெண் விடுதலையும் -**
**வழக்கறிஞர் செ.ம.மதிவதனி**

**தாயுமானவர் நம் தலைவர் -**
**திருமதி செ.கனிமொழி**

**திருநர் வாழ்வில் திராவிட அரசு -**
**முனைவர் ரியா**

ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

**மாநாட்டுத் தலைவர் உரை!**

மாலை 6.30 மணியளவில், இந்தியத் திருநாடே திரும்பிப் பார்க்கும் வண்ணம் இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டை நடத்தி வாகை சூடும் - கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாநாட்டுத் தலைமையுரையாற்றினார்.

மாநாட்டுத் தலைவர் உரையைத் தொடர்ந்து - கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றி னார்.

மாநாட்டின் முத்தாய்ப்பாக, கழகத் தலைவர் - ‘திராவிட மாடல்’ எனும் தீந்தமிழ் ஆட்சியின் நாயகர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றினார்.

கழகத் தலைவரின் உரையை அடுத்து - சேலம் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மருத்துவர் வீரபாண்டி ஆ.பிரபு நன்றியுரையாற்றினார்.

இம்மாநாட்டு நிகழ்வுகளை, நிகழ்ச்சி நிரலை - தி.செந்தில்வேல், திவ்யா நாதன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

**பல்வேறு சிறப்பு நிகழ்வுகள்!**

இம்மாநாட்டில் - மேற்கூறிய நிகழ்வுகளன்னியில்,

மாநாட்டு மலர் வெளியீடு,

கழக முன்னோடிகளுக்கு மரியாதை,

“நீட் விலக்கு நம் இலக்கு”

அஞ்சல் அட்டை ஒப்படைப்பு

புதுகை பூபாளம் கலைக்குழு,

பாடகர் திரு தெருக்குறள் அறிவு இசை நிகழ்ச்சி -

ஆகிய, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுக்கும் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர். பாலு, திமுக முதன்மை செயலாளர் கே. என்.நேரு, துணை பொதுச்செயலாளர்கள் இ.பெரியசாமி, பொன்முடி, கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இளைஞரணி நிர்வாகிகள், தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட லட்சோப லட்சம் பேர் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

மாநாட்டு மேடையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட திராவிட இயக்கத்தலைவர்களின் திருவுருவப் படங்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

**சேலம் மாநாடு விழாக் கோலம்!**

சேலத்தில் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாடு நடைபெறுவதை முன்னிட்டு சேலம் மாநகரம் எங்கும் கழக இளைஞர் அணித் தோழர்கள் வெண் சீருடையில் அணிவகுத்த காட்சிகளே தென்பட்டன. சேலம் மாநகரம் எங்கும் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படங்கள், வண்ண விளக்குகளால் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தன.

மேலும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் திருவுருவப் படங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டு இருந்தன.

மாநாட்டு முகப்பில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் உருவங்கள் எழிலார்ந்த முறையில் அமைக்கப்பட்டு இருந்தன.

**லட்சோப லட்ச மக்கள் திரண்டனர்!**

பரந்து விரிந்த மாநாட்டு பந்தலே கொள்ளாத அளவிற்கு மாநாட்டு பந்தலுக்கு வெளியேயும் மக்கள் லட்சக் கணக்கில் திரண்டிருந்த மாநாட்டிற்கு பெருமை சேர்த்தனர்.

மொத்தத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னின்று நடத்திய கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு தி.மு.கழக வரலாற்றில் - தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

---

### கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாடு:

## நாளைய வெற்றிக்கு நமக்கு ஊக்கமளிக்கட்டும்! புதிய வரலாறு படைக்கப் புறப்படுவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சேலம், ஜன. 21-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.01.2024), வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**“இன்று சேலம் கழக இளைஞர் அணி மாநாட்டில் தங்கை கனிமொழி ஏற்றி வைத்துள்ள நம் கழகக் கொடியும், மாநாட்டு அரங்கில் அதிரும் கொள்கை முழக்கங்களும் நாளைய வெற்றிக்கு நமக்கு ஊக்கமளிக்கட்டும்! புது வரலாறு படைக்கப் புறப்படுவோம்!”**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.







கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20–1–2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2– வது மாநில மாநாட்டையொட்டி முரசொலி மாறன் அரங்கத்தில் கழக இளைஞர் அணி சார்பில் புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினார்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், கழக இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக இளைஞரணியினர், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டையொட்டி, திராவிட இயக்க வரலாற்றை விளக்கும் 1500 டிரோன்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்ட பிரம்மாண்ட டிரோன் வண்ண ஒளி நிகழ்ச்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிககள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.1.2024) சேலம், பெத்தநாயக்கன்பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2–வது மாநில மாநாட்டையொட்டி கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட, இருசக்கர வாகனப் பேரணியானது, “மாநில உரிமை மீட்பு முழக்கத்துடன் இருசக்கர வாகன பேரணி மாநாட்டு பந்தலை வந்தடைந்ததை பார்வையிட்டார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும். நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா. அந்தியூர் செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (20.1.2024) சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2– வது மாநில மாநாட்டையொட்டி, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்களால் வழங்கப்பட்ட மாநாட்டு சுடரை கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வில், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோ டிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# சேலம் இளைஞர் அணியின் 2வது மாநில மாநாட்டின் எழுச்சிமிகு காட்சிகள்!









# சேலத்தில் கழக இளைஞரணியின் 2-வது மாநில மாநாட்டு எழில்மிகு காட்சிகள்!










மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தை வருகிற 24ஆம் தேதி கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்க உள்ளார். அதற்கான முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நேரில் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், கூடுதல் ஆட்சியர் மற்றும் பொதுப்பணி துறை அதிகாரிகள் உள்ளனர்.

### ஒன்றிய அரசு, தனது நயவஞ்சகப் போக்கை தொடருமேயானால்

## நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் அதற்கான பதிலடியை கொடுப்பது உறுதி!

### ‘தினகரன்‘ நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜன. 22 -

சமூக நீதிக்கான ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகள் தொடர்கிறது. ஒன்றிய அரசு தனது நயவஞ்சகப் போக்கை தொடருமேயானால் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் அதற்கான பதிலடியை கொடுப்பது உறுதி என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:-

ஒன்றிய அரசு சார்பில் கடந்த 2013ம் ஆண்டு 14வது நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. அப்போது குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடி, பிரதமர் தேர்தலுக்கான பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். அந்த சமயம், ஒன்றிய அரசின் வரியில் 50 சதவீதம், மாநில அரசுக்கு கொடுக்கவேண்டும் என வலியுறுத்தி வந்தார். ஆனால், மோடி பிரதமரான பிறகு அவரது சிந்தனை மற்றும் செயல்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. அதாவது, 2014ம் ஆண்டு பிரதமராக



தினகரன்

ஜனவரி 20, 2024 சனிக்கிழமை

வஞ்சிப்பதா?

ஒன்றிய அரசு சார்பில் கடந்த 2013ம் ஆண்டு 14வது நிதி ஆணையம் அமைக்கப்பட்டது. அப்போது குஜராத் முதல்வராக இருந்த நரேந்திர மோடி, பிரதமர் தேர்தலுக்கான பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். அந்த சமயம், ஒன்றிய அரசின் வரியில் 50 சதவீதம், மாநில அரசுக்கு கொடுக்கவேண்டும் என வலியுறுத்தி வந்தார். ஆனால், மோடி பிரதமரான பிறகு அவரது சிந்தனை மற்றும் செயல்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது. அதாவது, 2014ம் ஆண்டு பிரதமராக நரேந்திர மோடி பொறுப்பேற்றதும், மாநிலங்களுக்கான நிதி பங்கீட்டை குறைக்க நிதி ஆணையத்திடம் திரைமறைவு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அப்போது பிரதமர் அலுவலக இணை செயலாளராக பணியாற்றிய பி.வி.ஆர். சுப்பிரமணியம் மூலம், நிதி ஆணைய தலைவர் ஒய்.வி.ரெட்டியிடம், பிரதமர் நரேந்திர மோடி 2 மணி நேரம் திரைமறைவில்

நரேந்திர மோடி பொறுப்பேற்றதும், மாநிலங்களுக்கான நிதி பங்கீட்டை குறைக்க நிதி ஆணையத்திடம் திரைமறைவு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அப்போது பிரதமர் அலுவலக இணை செயலாளராக பணியாற்றிய பி.வி. ஆர். சுப்பிரமணியம் மூலம், நிதி ஆணைய தலைவர் ஒய்.வி.ரெட்டியிடம், பிரதமர் நரேந்திர மோடி 2 மணி நேரம் திரைமறைவில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். ஆனால், நிதி ஆணையத்தின் பரிந்துரையில், அதன் தலைவர் ஒய்.வி.ரெட்டி உறுதியாக இருந்ததால், ஒன்றிய நிதி நிலை அறிக்கை மறுசீரமைக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது. ஆனாலும், மக்கள் நலத்திட்டங்களுக்கான நிதியுதவி குறைக்கப்பட்டது. மாநிலங்களுக்கான நிதி பகிர்வை 32 சதவீதத்தில் இருந்து 42 சதவீதமாக அதிகரிக்க, ஆணையம் பரிந்துரை செய்தது.

ஆனால், பிரதமர் மோடியும், ஒன்றிய அரசின் நிதி அமைச்சகமும் 33 சதவீதமாக குறைத்தனர். மகளிர் மற்றும் குழந்தைகள் நல நிதி 36 ஆயிரம் கோடி ரூபாயில் இருந்து 18 ஆயிரம் கோடி ரூபாயாக குறைக்கப்பட்டது. பி.வி. ஆர். சுப்பிரமணியம் மூலம் வெளிவந்துள்ள இந்த விவகாரம், தற்போது பெரும் சர்ச்சையை கிளப்பி யுள்ளது. இந்நிலையில், 2024 - 25ம் நிதி ஆண்டுக்கான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதற்கான நாடாளுமன்ற கூட்டத்தொடர் வரும் ஜனவரி 31ம் தேதி நடைபெற இருக்கிறது.

வரும் ஏப்ரல், மே மாதங்களில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற இருப்பதால், இந்த ஆண்டு, இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட இருக்கிறது. மாநிலங்களுக்கான நிதி பகிர்வை குறைக்க முயன்றது தொடர்பாக, பி.வி.ஆர்.சுப்பிரமணியம் தெரிவித்திருப்பது இந்திய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் இந்த விவகாரத்தை, எதிர்க்கட்சிகள் கையில் எடுக்க திட்டமிட்டுள்ளன.

இந்தியாவில் உள்ள 28 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய ஆட்சிக்கு பகிர்ந்தளிக்கப்படும் ஒட்டுமொத்த வரி பங்குத்தொகையை பல்வேறு மாநிலங்களுக்கு இடையே எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதற்காக அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை பிரதமர் மோடி ஏற்காதது, மாநிலங்களை தண்டிக்கும் நோக்கம் என்பதை தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது. குறிப்பாக, தமிழ்நாட்டின் மீது மிக கொடுமையான நிதி தாக்குதலை பிரதமர் தொடுத்துள்ளார். தொழில் வளர்ச்சியில் முன்னணியில் உள்ளதாக கூறப்படும் குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் வரி வசூல் விகிதம் அதிகம். ஒன்றிய அரசு, தமிழ்நாட்டில் இருந்து அள்ளிச்செல்லும் வரி வருமானத்தில், பாதியையாவது தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யவேண்டும்.

ஆனால், 42 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக குறைத்திருப்பது, ஒன்றிய அரசின் தமிழின பகை போக்கில், இன்னொரு கொடிய நடவடிக்கை ஆகும். இவ்வளவு நிதி நெருக்கடியிலும், அரசு பள்ளிகளில் காலை உணவுத்திட்டம், மகளிர் சுயமரியாதையை வலுப்படுத்தும் வகையில், மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் என சமூக நீதிக்கான “திராவிட மாடல்’’ ஆட்சியின் சாதனைகள் தொடர்கிறது. ஒன்றிய அரசு, தனது நயவஞ்சக போக்கை தொடருமேயானால், அதற்கான பதிலடியை நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் கொடுப்பார்கள். இது நிச்சயம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அருள்மிகு முருகப்பெருமான் திருக்கோயில்களில் மட்டும்

# ரூ.731.47 கோடி மதிப்பீட்டில் 411 பணிகள் நடைபெற்று வருகின்றன!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜன. 22 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தை கிருத்திகையை முன்னிட்டு, அறுபடை வீடுகளை போற்றும் வகையில் நேற்று முன்தினம் (20.01.2024) திருப்போரூர், அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள முருகப்பெருமானின் அறுபடை வீடு அரங்குகளை பார்வையிட்டு, நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியையும், திருக்கோயிலில் நாள் முழுவதும் பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியையும் தொடங்கி வைத்தார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தை கிருத்திகை மற்றும் தைப்பூச நாட்களில் முருகன் திருக்கோயில்களுக்கு வருகை தரும் அனைத்து பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி நாள்தோறும் புதிய திட்டங்க பக்தர்களுக்காக அறிவித்து திராவிட மாடல் ஆட்சி செயல்படுத்தி வருகிறது.

திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் திருமண மண்டபத்தில் பக்தர்கள் அறுபடை வீடுகளையும் ஒரே இடத்தில் தரிசிக்கின்ற வகையில் அரங்கங்கள் ஏற்பாடு செய்தும், இன்று நாள் முழுவதும் அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கும் நிகழ்வை தொடங்கி வைத்துள்ளோம்.

இதேபோல் வருகின்ற தைப்பூசத்திற்கும் நாள் முழுவதும் அன்னதானமும், பிரசாதமும் வழங்கப்படுவதோடு, பக்தர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும். அதற்கான பணிகளை அலுவலர்கள் துரிதமாக மேற்கொள்வார்கள்.

திருப்போரூர், அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் சார்பில் கட்டப்பட்டு நீண்ட நாட்கள் திறக்கப்படாமல் இருந்த திருமண மண்டபத்தை இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் திறந்து வைக்கப்பட்டது. மேலும் திருக்கோயில் அலுவலகத்திற்கு ரூ.94 லட்சம் மதிப்பீட்டிலான பணிகள் முடிவுறும் நிலையிலும், ரூ.6.65 கோடி செலவில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி தொடங்கப்பட்டும் நிலையிலும், ரூ.47 லட்ச ரூபாய் செலவில் ஸ்ரீமத் சிதம்பர சாமிகள் மடம் திருக்குளம் புதுப்பிக்கும் பணி நடைபெற்றும் வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட பிறகு இறை பசியோடும், வயிற்றுப் பசியோடும் வருபவர்களின் இரண்டு பசியையும் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் 2 திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்ட முழு நேர அன்னதானத் திட்டம் 8 திருக்கோயில்களுக்கு விரிவு படுத்தப்பட்டதோடு, இந்தாண்டு மேலும் 3 திருக்கோயில்களில் முழு நேர அன்னதான திட்டம் விரைவில் தொடங்கி வைக்கப்பட உள்ளது.

அதேபோல ஒருவேளை அன்னதான திட்டத்தில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 10 திருக்கோயில்கள் இணைத்துக்கொள்ளப்பட்டன. இவ்வாண்டு மேலும் 7 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட உள்ளன. இத்திட்டங்களின் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 82 ஆயிரம் பக்தர்கள் உணவருந்துகின்றனர். இதற்காக ஆண்டு ஒன்றிற்கு 105 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. திருக்கோயில்களின் அன்னதானம் மற்றும் பிரசாதத்தின் தரத்தினை உறுதிபடுத்தி ஒன்றிய அரசின் தரச் சான்றிதழ்களை (BHOG) இந்தியாவிலேயே அதிகமான எண்ணிக்கையில் தமிழ்நாடு தான் பெற்றுள்ளது.

பழனியில் தைப்பூசம் மற்றும் பங்குனி உத்திரத்திற்கு 20 நாட்கள் நாளொன்றுக்கு 10,000 நபர்கள் வீதம் 2 இலட்சம் பக்தர்களுக்கு அன்னதானமும், பழனி திருக்கோயில் நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் 4000 மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டியும் வழங்கப்படுகின்றது.

வடலூர் வள்ளலார் திருக்கோவிலில் ஒரு நாளைக்கு 10,000 சன்மார்க்க அன்பர்கள் என 3 நாட்களுக்கு 30,000 சன்மார்க்க அன்பர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி, நெல்லையப்பர் திருக்கோயிலில் திருவிழா காலங்களில் 500 நபர்களுக்கும், திருப்பட்டூர் பிரம்மபுரீஸ்வரர் திருக்கோயிலில் வியாழக்கிழமை தோறும் 500 நபர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இப்படி பல்வேறு நல திட்டங்களால் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கட்மைத்து தருகின்ற ஒரு அரசாக திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இன்றுவரை 1,225 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. மேலும் இந்த மாத இறுதிக்குள் 1,316ஆக இந்த எண்ணிக்கை உயரும். அதேபோல் நில மீட்பை பொறுத்த அளவில் ரூ. 5,508 கோடி மதிப்பிலான 6,071 ஏக்கர் நிலத்தை மீட்டிருக்கின்றோம். தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகபெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளில் ரூ. 599.50 கோடி மதிப்பீட்டில் 238 பணிகளும், அறுபடை வீடுகள் அல்லாத முருகன் திருக்கோயில்களில் ரூ.131.97 கோடி மதிப்பீட்டில் 173 பணிகளும் ஆக மொத்தம் முருகன் திருக்கோயில்களில் மட்டும் ரூ.731.47 கோடி மதிப்பீட்டில் 411 பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் இந்தாண்டு முதல் 1000 மூத்த குடிமக்களை அறுபடை வீடுகளுக்கு கட்டணமில்லாமல் அழைத்துச் செல்லும் ஆன்மிகப் பயணத்தின் முதற்கட்ட பயணம் வரும் 28-ஆம் தேதியும், இராமேஸ்வரம் - காசி ஆன்மிகப் பயணத்தில் இந்தாண்டு 300 நபர்கள் 5 கட்டங்களாகவும் அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இந்து சமய அறநிலைத்துறையானது இப்படி பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அருள்மிகு பாம்பன் சுவாமிகளின் மயூர வாகன சேவனத்தின் 100 ஆண்டு விழாவை மிக சிறப்பாக கொண்டாடி, அவரது வாழ்க்கை வரலாற்று சரித்திரத்தை மறுபதிப்பு செய்து வெளியிட்டும், 108 இசைக் கல்லூரி மாணவ, மாணவியர் சண்முக கவசம் மற்றும் குமாரஸ்தவம் ஆகியவற்றை பாராயணம் செய்தும் சிறப்பு செய்தோம். ஆனால் இன்று சிலர் சுத்தமாக இருக்கின்ற கோயில்களையே சுத்தப்படுத்துவது போல மீடியா பப்ளிசிட்டிக்காக செய்து கொண்டிருக்கின்றார்கள். அதற்கு ஆளுநர் அவர்களும் துணை நின்று, சுத்தம் செய்கிறேன் என்று புறப்பட்டு இருக்கின்றார். ஏற்கனவே ஆலயங்கள் அனைத்தும் தூய்மையாக தான் பராமரிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் வடகலை, தென்கலை பிரச்சனையை நான் ஏற்கனவே அமைச்சர் என்ற முறையில் இரண்டு முறை அவர்களை அழைத்து தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றேன். துறையினுடைய செயலாளர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களும் அழைத்து பேசியிருக்கிறார்கள்.

இந்து சமய அறநிலையத் துறை அலுவலகத்திலும் சுமார் 8 முறை பேச்சுவார்த்தை நடத்தி இருக்கின்றோம். மனது ஒத்துப் போனால் தான் இந்த பிரச்சனைக்கு தீர்வு ஏற்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளின் போது, செங்கல்பட்டு சார் ஆட்சியர் வி.எஸ். நாராயண சர்மா, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் திருமதி மா. கவிதா, காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் திருமதி இரா.வான்மதி, செங்கல்பட்டு உதவி ஆணையர் லட்சுமிகாந்த பாரதிதாசன், திருப்போரூர் பேரூராட்சி தலைவர் எம். தேவராஜ், திருக்கோயில் செயல் அலுவலர் கே.குமரவேல் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆளும் பா.ஜ.க. அரசின் ஊதுகுழலாக மாறிவிட்ட ‘பொதிகை’ தொலைக்காட்சி!

# ‘டிடி தமிழ்’ என பெயர் மாறி நேயர்களின் நம்பிக்கையை இழந்துள்ளது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜன. 22-

நாட்டின் அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு, அனைவருக்கும் பொதுவான நிகழ்ச்சிகளை ஒலி, ஒளிபரப்ப வேண்டிய வானொலியும் பொதிகை தொலைக் காட்சியும் ஆளும் அரசின் ஊதுகுழலாக மாறிவிட்டதால் நேயர்களின் நம்பிக்கையை இழந்துள்ளது என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அது வருமாறு:-

ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் தமிழர்களின் பண்பாட்டையும் சீர்குலைத்து வருகிறது. அதில் ஒன்று தான் தமிழகத்தில் உள்ள பொதிகை தொலைக் காட்சி பெயரை டிடி தமிழ் என பெயர் மாற்றம் செய்திருப்பது.

அந்தந்த மாநிலங்களில் உள்ள புகழ் பெற்ற மலைகளின் பெயர்களை, அந்தந்த


தீக்கதிர்
2024 ஜனவரி 20 சனிக்கிழமை
புதைக்கப்பட்ட ‘பொதிகை’
ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து தமிழ் நாட்டையும் தமிழ் மொழியையும் தமிழர்களின் பண்பாட்டையும் சீர்குலைத்து வருகிறது. அதில் ஒன்று தான் தமிழகத்தில் உள்ள பொதிகை தொலைக் காட்சி பெயரை டிடி தமிழ் என பெயர் மாற்றம் செய்திருப்பது. அந்தந்த மாநிலங்களில் உள்ள புகழ் பெற்ற மலைகளின் பெயர்களை, அந்தந்த மொழி பேசும் மக்கள் பரிந்துரைத்ததன் அடிப்படையில், தமிழில் பொதிகை, கன்னடத்தில் சந்தனா, தெலுங்கில் சப்தகிரி, மகாராஷ்டிராவில் சஹ யாத்ரி, குஜராத்தில் கிரினார் என்று அரசு தொலைக் காட்சிகளுக்கு பெயர்கள் வைக்கப்பட்டன. தமிழ் மக்களின் தனித்துவமான, உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில்இருந்த பொதிகை தொலைக்காட்சியும் அகில இந்திய வானொலியும் கடந்த சில ஆண்டுகளாக

மொழி பேசும் மக்கள் பரிந்துரைத்ததன் அடிப்படையில், தமிழில் பொதிகை, கன்னடத்தில் சந்தனா, தெலுங்கில் சப்தகிரி, மகாராஷ்டிராவில் சஹ யாத்ரி, குஜராத்தில் கிரினார் என்று அரசு தொலைக் காட்சிகளுக்கு பெயர்கள் வைக் கப்பட்டன. தமிழ் மக்களின் தனித்துவமான, உணர்வுகளை பிரதிபலிக்கும் வகையில்இருந்த பொதிகை தொலைக்காட்சியும் அகில இந்திய வானொலியும் கடந்த சில ஆண்டுகளாக ஆளும் பா.ஜ.க.வின் ஊதுகுழலாக மாற்றப்பட்டுள் ளது.

மற்ற மாநிலங்களிலும் இதே நிலைதான். தமிழ் மொழியை மேம்படுத்துவது போன்றும், திருக்குறளை பெருமைப்படுத்துவது போன்றும் பிரதமரும் ஒன்றிய அமைச்சர்களும் பேசினாலும் நடைமுறையில் தமிழை ஒழித்துக்கட்டும் வேலைதான் நடைபெறுகிறது. பொதிகை தொலைக்காட்சியிலும் அகில இந்திய வானொலியிலும் தமிழ் மொழி சார்ந்த நிகழ்ச்சிகள் குறைக்கப்பட்டன. தமிழக மண் சார்ந்த, தமிழக மக்கள் சார்ந்த கலை கலாச்சார நிகழ்ச்சிகளுக்கு போதிய நேரம் ஒதுக்காமல் இந்தி அல்லது சமஸ்கிருத மொழியில் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் தமிழக மக்களிடம் திணிக்கப்படுகின்றன.

பிரதமர் மோடி தலைமை யிலான பா.ஜ.க. அரசு இரண்டாவது முறையாக பதவியேற்ற பின்னர் இந்தியா முழுவதும் அரசு தொலைக்காட்சிகளும் வானொலியும் நடுநிலைமையில் இருந்து தடம் புரண்டன. காங்கிரஸ் ஆட்சியின் போது ஒன்றிய அரசின் செய்திகள் அதிகமாக இருந்தாலும் அங்கீகரிக் கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கும் போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஆனால் கடந்த 5 ஆண்டுகளாக மோடியின் புகழ் பாடும் நிலையங்களாக பொதிகை தொலைக் காட்சியும் வானொலியும் மாற்றப்பட்டுள்ளன.

பிரசார்பாரதி அமைக்கப்பட்ட பின்னர் ஒன்றிய அரசின் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்கள் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல் படும் என்று நாடாளுமன்றத்தில் உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதியை மோடி அரசு காப்பாற்றவில்லை.

தமிழகத்தில் உள்ள வானொலி நிலையங்களிலும் தமிழ் மொழி நிகழ்ச்சிகள் குறைக்கப் பட்டதோடு சென்னை தவிர்த்த இதர வானொலி நிலையங்களில் ஒலிபரப்புகள் நிறுத்தப் பட்டுள்ளன. நாட்டின் அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு, அனைவருக்கும் பொதுவான நிகழ்ச்சிகளை ஒலி, ஒளிபரப்பவேண்டிய வானொலியும் பொதிகை தொலைக்காட்சியும் ஆளும் அரசின் ஊதுகுழலாக மாறிவிட்டதால் நேயர்களின் நம்பிக்கையை இழந்தது தான் மிச்சம். இப்போது ‘பொதிகை’ என்ற பெயரும் மாற்றப்பட்டு விட்டது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)1/2024 நாள் : 19.01.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.5,6,7,8,10, 11,16,17,27,35,45,50,55, 67,71,81,83,96க்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகள் செய்தல் | 19 பணி | 06.02.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 07.02.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 037/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 20.01.2024


# இந்தி - இந்து - இந்துஸ்தானம் என்ற பிரதமர் மோடியின் அரசியல் கோட்பாடும் - செயல்பாடும் இந்திய நாட்டின் ஒற்றுமையை சீர்குலைத்து, சிதறடிக்கும்!!

**கா**ங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் நீண்டகால நாடாளுமன்ற உறுப்பினருமான நாடறிந்த திருமிகு. சசிதரூர் அவர்கள் சென்னை மியூசிக் அகாடமியில், துக்ளக் பத்திரிக்கையின் 54வது ஆண்டு விழாவினையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்றைய துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி அவர்களையும் உடன் வைத்துக் கொண்டு ஆற்றிய உரையின் சில கருத்துகள், இந்திய நாட்டின் ஒற்றுமையின் மீதும், இந்தியாவின் பன்முகத்தன்மையின் மீதும் அக்கறை கொண்டவர்களை ஆழ்ந்து கவலையுடன் சிந்திக்க வைத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

கடந்த 10 ஆண்டுகளில் பிரதமர் மோடியின் ஆட்சியில் எத்தகைய காரணங்களினால், கூட்டாட்சி முறை உருக்குலைக்கப்பட்டு, வடக்கு - தெற்கு என்ற வேறுபாடு விரிவடைந்திருக்கிறது என்பதை கூட்டத்தில் உள்ள சிலரின் சலசலப்புக்கிடையில் தெளிவுபடுத்துகிறார். (Not withstanding heckles from a section of the audience, congress leader Shashi Tharoor, who was the chief guest at Thuglak magazine's 54th annual meet at the Music Academy in Chennai on Sunday, defended the idea of a “plural” India and explained how the divide between North India and South India had grown over the past 10 years of Prime Minister Narendra Modi's tenure, affecting federalism.) (THE HINDU Date: 15.01.2024 Page No: 6)

அதுமட்டுமல்ல இந்திய நாட்டின் பன்முகத்தன்மையை இத்தகைய நெருக்கடியான அரசியல் சூழ்நிலையில் பாதுகாக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகிறார். மேலும் இந்திய சமுகம் என்பது ஏற்றத்தாழ்வற்ற இயற்கை நீதியின் (Equitable society) அடிப்படையில் கட்டமைக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்துகிறார். சசிதரூர் வலியுறுத்தும் இந்த இயற்கை நீதியின் அடிப்படையிலான சமூகக் கட்டமைப்பு என்பது திராவிட மாடல் ஆட்சி அமல்படுத்திக்கொண்டிருக்கும் சமுகநீதிக் கோட்பாட்டின் மறுவடிவம் தான் என்பதில் வேறுபாட்டிற்கு இடமில்லை. தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் பிரகடனப்படுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சியின் ஓர் அங்கமான சமூகநீதிக் கோட்பாடுதான் இந்தியநாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றி உறுதிசெய்யும், என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் தான் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் பல்துறை அறிஞரும், ஆற்றலாளருமான சசிதரூர் அவர்கள் தீர்மானமாக பிரகடனப்படுத்துகிறார்.

சசிதரூர் அவர்கள் “இந்தி”, “இந்து”, “இந்துஸ்தான்” என்ற முழக்கம் மற்றும் ஆரிய கலாச்சாரத்தின் ஆதிக்கம் ஆகிய கொள்கை நிலைப்பாடுகளும் இதுகுறித்த ஒன்றிய அரசின் செயல்பாடுகள் தனக்கு ஆழ்ந்த வருத்தமளிப்பதாக தெரிவிக்கிறார். (I do worry about Hindi, Hindu, Hindustan politics of this government, and this culture of Aryavrat domination....) (THE HINDU Date: 15.01.2024) இத்தகைய ஒன்றிய அரசின் அரசியல் பார்வையும், செயல்பாடுகளும், இந்திய நாட்டின் ஒற்றுமையை வெகுவாகப் பாதிக்கும் என்பதை “துக்ளக்” பத்திரிக்கையின் ஆசிரியர் குருமூர்த்தி முன்னிலையிலேயே பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்கள்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
உயர்நிலை செயல்திட்டக்குழு
உறுப்பினர்



இந்திய அரசியல் சட்டம் (Indian constitution) மதச்சார்பற்ற ஆட்சி முறையைத்தான் வலியுறுத்துகிறது. எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் தங்கள் மார்க்க வழிபாடுகளை நடத்திக் கொள்ள முழு உரிமையையும் வழங்குகிறது. ஆனால் மதம் சார்ந்த நடவடிக்கைகள் அரசியல் ஆதாயத்திற்காக அரங்கேற்றம் செய்யப்படுவது எந்த வகையிலும், ஏற்புடையதல்ல என்பதுதான் அரசியல் சட்டத்தின் நோக்கமும், திட்டமும் ஆகும்.

ஆனால் சமீபத்தில் ஊடகங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் செய்திகள் அயோத்தி ராமர் கோவில் பற்றியதாகத்தான் உள்ளது. அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டு. ராம பக்தர்கள் வழிபாடு செய்வதற்கான ஏற்பாடுகளை இந்துமத வாதிகள் செய்வதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க வாய்ப்பில்லை. ஆனால் இன்று அயோத்தியில் ராமர் கோவில் திறப்பு விழாவிற்கு ஒன்றிய அரசும், பிரதமர் மோடி அவர்களும் எடுத்துக் கொள்ளும், அக்கறையும், முறைகளும் செயல்பாடுகளும் இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கத்தையும், திட்டத்தையும் சிதறடிக்கச் செய்கிறது. ஆன்மிக விழாவாக நடத்தப்பட வேண்டிய அயோத்தி ராம் லல்லா சிலை கருவறையில் பிரதிஷ்டை செய்யும் நிகழ்ச்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக நடத்தப்படும் அரசியல் ஆதிக்கத்திற்கான திருவிழாவாகத்தான் மக்கள் கருதுகிறார்கள்.

இந்த நிகழ்ச்சி இந்திய ஒன்றிய மக்களிடம் ஓர் ஆழமான அச்சத்தையும், கவலையையும் உருவாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை, ஆன்மீகத்தில் நம்பிக்கையுள்ள, ஆன்மீகக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பிவரும் நான்கு சங்கராச்சாரியார்கள் அயோத்தி ராமர் கோவிலை இன்றும் முழுமையாகக் கட்டி முடிக்கப்படாத நிலையில், ராமர் கோவில் திறப்புவிழா நிகழ்ச்சி நடத்துவது சரியானதல்ல என்ற கருத்தை தெரிவித்துள்ளார்கள். (Speaking about the inaguration of Ram Temple in Ayodhya, Shashi Taroor said there was no point in inagurating the Temple where it is incomplete “When the four Shankarachariyars are saying that it is an incomplete temple, It cannot have a Prana Pratishtha a ritual to inagurate temples” Tharoor said (The Times of India Page no: 7, Date: 15.1.2024)

இத்தகைய சூழ்நிலையில் ராம் லல்லா சிலையை பிரதிஷ்டை செய்யும் ஜனவரித் திங்கள் 22ம் நாள் நாடு முழுமையும் உள்ள இல்லங்கள் முன்பாக “ராமஜோதி” என்ற அகல்விளக்குகளை ஏற்றி வைக்க வேண்டுமென்ற வேண்டுகோள் விடுப்பதும், இந்தியா முழுமையும் உள்ள ஆலயங்களில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழங்குவதும், இந்த நிகழ்ச்சி, அரசியல் நோக்கத்துடன், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்காக நடத்தப்படும் நிகழ்ச்சி என்பதும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் தெளிவாகவே விளங்கும். இதுபோன்றுதான் கடந்த தேர்தலுக்கு முன்னதாக நடைபெற்ற “புல்வாமா” தாக்குதலை, தங்களது அரசியல் லாபத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியினை பயன்படுத்தி பிரதமர் மோடி அவர்கள், இந்துமத அடிப்படையிலான அரசியல் நடவடிக்கைகளை எல்லா மட்டத்திலும், எல்லாத் துறைகளிலும், திட்டமிட்டு மேற்கொள்வதும், மாநில ஆளுநர் மூலம் எதிர்க்கட்சிகள், ஆட்சியில் உள்ள மாநிலங்களில், அந்தந்த மாநில மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுகளின் நோக்கங்களுக்கும், திட்டங்களுக்கும், ஏன்? அரசியல்சட்ட வரையறைகளும் முரண்பாடாகச் செயல்படுவதும் ஒன்றிய அரசின் உள்நோக்கத்தை தெளிவுபடுத்துகிறது.

இந்திய அரசியல் சட்டத்தை செயலிழக்கச் செய்துவிட்டு, புதியதோர் ஆட்சியமைப்பை உருவாக்கும் ஒன்றிய அரசின் மறைமுகத்திட்டம், அவர்களது திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுகிறது. இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு வரும் நாடாளுமன்றத் தேர்தலை வழித்தடமாக பயன்படுத்திக் கொள்ள திரைமறைவுப் பணிகளை தொடங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல பன்முகத்தன்மை கொண்ட, இந்தியத்துணைக்கண்டத்தை “இந்துராஷ்டிரமாக” மாற்றிடவும், அதற்கு வெள்ளோட்டமாக “இந்து தேசியம்” என்ற முழக்கத்தைப் பரவலாக்குகிறார்கள். “இந்துதேசியம்” என்ற முழக்கம் பன்முகத் தன்மைகொண்ட, பல்வேறு தேசிய இனங்கள் வாழக்கூடிய, வரலாற்று ஆசிரியர்களால் துணைக்கண்டம் என தீர்மானிக்கப்பட்ட இந்திய ஒன்றியத்திற்கு முற்றிலும் ஏற்புடையதாக இருக்காது என்பது மட்டும், உறுதி!!

இந்திய ஒன்றிய மக்களின் உணர்வுகளையும், பன்முகத் தன்மையையும், திட்டமிட்டுப் புறந்தள்ளிவிட்டு “இந்துராஷ்டிரம்”, “இந்துதேசியம்” என்ற திட்டங்களை ஒன்றிய அரசு, தங்களின், நாடாளுமன்ற எண்ணிக்கை பலத்தை மட்டும், கணக்கிலெடுத்துக்கொண்டு, தங்களது திட்டங்களை, செயல்படுத்தத் தொடங்குவார்களேயானால் இதன் பக்கவிளைவாக. பல்வேறு தேசிய இனங்கள் தங்களைத் தனிப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியமும், கட்டாயமும், உருவாகும். இந்திய அரசியல் சட்டம் என்பது மக்களால் உருவாக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. அத்தகைய மக்களால் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளை மாற்றும் அதிகாரம் ஒன்றிய அரசிற்கு நிச்சய மாக இல்லை.

பன்முகத்தன்மையை இயற்கையிலேயே பெற்று இயல்பாக பல்வேறு தேசிய இனங்கள் இணக்கமாக கடந்த 75 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தியா என்ற இந்த நிலப்பரப்பில் “இந்துதேசியம்” என்ற முழக்கம் வெற்றிபெறாது என்பதோடு எதிர்பார்க்கவியலாத பக்கவிளைவுகளையும் உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. இந்திய மக்கள் எப்படிப்பட்ட நவீன இந்தியாவை விரும்புகிறார்கள் என்பதை சசிதரூர் அவர்கள் தன்னுடைய புத்தகமான சமூக வாழ்க்கை முறைக்கான போராட்டம்(The Battle of Belonging – By Shashi Tharoor) என்ற ஆங்கில புத்தகத்தில் தெளிவுபடுத்துகிறார்.

நவீன இந்தியா என்பது இங்குவாழும் அனைவருக்கும் சொந்தமானதாகவும், அங்கு அமையும் அரசு அனைவருக்கும் பணிமேற்கொள்ளும் அரசாக இருக்கவேண்டுமா? அல்லது நவீன இந்தியா என்பது சிலருக்கு மட்டும் உரியதாகவும், அவர்களுக்காகப் பயன்படக்கூடியதாகவும், இருக்கவேண்டுமா? என்ற அடிப்படையான கேள்விக்கு அரசியல் சட்டம் தெளிவுபடுத்தியிருக்கிறது.

அரசியல் சட்ட அடிப்படையிலான ஜனநாயகக் குடியரசும், சமூக தேசியமும் புறந்தள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறார். (We can have a New India that belongs to all of us, led by a government that works for all of us. Or we can have a New India that belong to some, and serves the interests of a few. That is the difference between the civic nationalism enshrined in the constitutional republic and the ethnoreligiouslinguistic nationalism of the Hindutva movement.) (The battle of belonging: page No. 405 By Shashi Tharoor) நாடாளுமன்ற உறுப்பினர் சசிதரூர் அவர்கள் நவீன இந்திய உருவாவதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளை தன்னுடைய ஆங்கிலப் புத்தகத்தில் விவரிக்கிறார்.

அவர் விவரிக்கும் காரணங்களின் வேர்களாகவும், விழுதுகளாகவும், காலத்தை வென்று நிற்பது “சமூகநீதி” என்ற திராவிடமாடல் ஆட்சி முறையின் அடிப்படைக் கோட்பாடாகும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சமூகநீதிக் கோட்பாட்டை உயர்த்திப்பிடித்து இந்திய நாட்டு மக்களுக்கு சிறந்த வழிகாட்டும் வகையில் கழகத் தலைவர் முதல்வர் தளபதியார் தலைமையில் தமிழகத்தின் தேர்தல்களத்தில் பெருவெற்றிகளை ஈட்டிட அணிவகுப்போம், ஆம்! அதற்கான வெள்ளோட்டம்தான் அமைச்சர் மாநில இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னின்று, வழிநடத்தும் சேலத்தில் நடைபெறவுள்ள மாநில இளைஞர் அணியின் இரண்டாவது மாநாடு.

ஆம்!!

அரிமாக்களாக அணிதிரள்வோம்!
வீழ்த்துவோம் வீணர்களை!
வெற்றி பெறுவோம்!! தேர்தல்களத்தில்!!





ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து வளாகத்தில் ஈரோடு மாவட்டத்திற்கான 3 புதிய பேருந்து வழித்தடத்திற்கான சேவையினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி கொடியசைத்து துவக்கி வைத்து பேருந்தில் பயணம் செய்தார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் எ.ஜி.வெங்கடாசலம், நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில், தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்த திட்டத்தின்கீழ், 3வது மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் (20.01.2024) அன்று நடைபெற்றது. உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.இரா.மணி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்செல்வன், நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந்தாங்கி), ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), வி.ராமசாமி (அன்னவாசல்), நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# மருத்துவம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, ஜன. 22 -

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் தோய் தடுப்பு மருத்துத்துறை சார்பி தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்த திட்டத்தின்கீழ், 3வது பாவட்ட சுகாதார பேரவைக் கூட்டம், சட்டம், நீதிமன்ற ங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் (20.01.2024) அன்று நடைபெற்றது.

பின்னர் சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத்துறையில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு மருத்தவம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், முதல மைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம், கண்ணொளி காப்போம் திட்டம், டாக்டர் முத்து லட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் உள்ளிட்ட

மருத்துவம் சார்ந்த திட்டங்களின் மூலம் பொது மக்களின் நலன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், 3வது மாவட்ட சுகாதார பேரவைக் கூட்டம் நடைபெற்றது. பொது மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சிகிச்சை முறைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும், மருத்துவத்துறைக்கு தேவையான வசதிகளை பூர்த்தி செய்யும் வகையிலும், மருத்துவர்கள், மருத்துவத்துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மூலம் தேவைகளை கேட்டறிந்து அவற்றை நிறைவேற்றிட நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில், மாவட்ட சுகாதார பேரலை கூட்டங்களை மாவட்ட அளவில் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 ஆண்டுகளில் 26.08.2021 அன்று முதல் பேரவை கூட்டமும், 03.03.2023 அன்று இரண்டாவது மாவட்ட சுகாதார பேரவை கூட்டமும் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்றையதினம் மூன்றாவது சுகாதார பேரவை கூட்டம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் புதுக் கோட்டை மாவட்டத்தில் 07.05.2021 முதல் 15.11.2023 தேதி வரை ரூபாய் 88 கோடியே 99 இலட்சம் மதிப்பீட்டில் அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மற்றும் பல்வேறு ஆரம்ப சுகாதார நிலைய புற நோயாளிகள் கட்டிடங்கள், செவிலியர் குடியிருப்புகள், துணை சுகாதார செவிலியர் குடியிருப்புகள், துணை சுகாதார நிலையங்கள் ஆகியவை கட்டி முடித்து திறந்து வைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் 31 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் புதிய கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மருத்துவ கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, மாவட்ட சுகாதார பேரவை மூலம் பெறப்பட்ட கோரிக்கைகள் மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், கூடுதல் துணை சுகாதார நிலையங்கள் அமைக்க அரசுக்கு உரிய கருத்துருக்கள் அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், அரசு சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் மேம்படுத்தப்பட்ட படுக்கை வசதி கொண்ட கட்டிடங்கள், அவசர சிகிச்சை பிரிவுகள், கூடுதல் ஆய்வக உபகரண வசதிகள், சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ. இரத்த வங்கிட ஆய்வகங்கள், கூடுதல் ஆம்புலன்ஸ் வாகனங்கள் ஆகியவற்றின் தேவைகள் பெறப்பட்டு, மாவட்ட சுகாதார பேரவை மூலம் அரசுக்கு பரிந்துரை செய்யப்படும். புதுக்கோட்டை மாவட்டத்தில் நகர்ப்புற சுகாதார சேவைகளை மேம்படுத்திடும் விதமாக ஏற்கனவே உள்ள இரண்டு நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் கூடுதலாக ரூபாய் ஒரு கோடியே 20 லட்சம் செலவில் புதிய நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அசோக் நகர் பகுதிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன. மேலும் நகர்ப்புற சுகாதார சேவைகளை மேம்படுத்தும் விதமாக காந்திநகர் மற்றும் மாலையிடு பகுதிகளில் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் துவக்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. காமராஜபுரம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கு ரூபாய் 60 லட்சம் செலவில் கூடுதல் கட்டிடங்களும், மச்சுவாடி மற்றும் ராஜகோபாலபுரம் ஆகிய பகுதிகளில் புதிய இரண்டு நகர்ப்புற துணை சுகாதர நிலையங்கள் ரூபாய் 60 லட்சம் செலவில்

கட்டிடங்களும் அமைக்க பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. அறந்தாங்கி நகராட்சி பகுதியில் ரூபாய் ஒரு கோடியே 20 லட்சம் செலவில் புதிய நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டிட பணிகள், புதிய நகர்ப்புற நல வாழ்வு மையம் ஒன்று 25 இலட்சம் செலவில் அமைக்க பணிகள் துவக்கப் பட்டுள்ளது கட்டமைப்பு சேவைகளை மேம்படுத்துவதன் மூலம் மாவட்டத்தில் மகப்பேறு இறப்பு விகிதம், சிசு இறப்பு விகிதம், பிறப்பு விகிதம், குறைவான எடையுள்ள குழந்தைகள் பிறப்பு விகிதம், உயர் பிறப்பு விகிதம் ஆகிய குறியீடுகள் குறைக்கப்பட்டு தரமான

விகிதம், சிசு இறப்பு விகிதம், பிறப்பு விகிதம், குறைவான எடையுள்ள குழந்தைகள் பிறப்பு விகிதம், உயர் பிறப்பு விகிதம் ஆகிய குறியீடுகள் குறைக்கப்பட்டு தரமான சேவைகள் வழங்கப்பட்டு வருவதை மாவட்ட நிர்வாகம் மூலம் கண்காணிக்க தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் தேசிய தரச் சான்று விதிகளின் கீழ் 27 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேசிய தரச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 அரசு மருத்துவமனைகள் தேசிய தரச் சான்றிதழ் பெற்றுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 05.08.2021 மகளிர் மருத்துவம் திட்டம் துவங்கப்பட்டு 13,03,130 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு தொடர் சிகிச்சைகளின் மூலமாக 3,45,552 நபர்களுக்கு இரத்த கொதிப்பு, சர்க்கரை நோய் ஆகிய பாதிப்புகள் இருப்பது கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தொடர் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 05.08.2021 மகளிர் மருத்துவம் திட்டம் துவங்கப்பட்டு 13,03,130 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டு தொடர் சிகிச்சைகளின் மூலமாக 3,45,562 நபர்களுக்கு இரத்த கொதிப்பு, சர்க்கரை நோய் ஆகிய பாதிப்புகள் கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தொடர் மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ், கடந்த மூன்று ஆண்டுகளில் 32,126 பயனாளிகள் ரூபாய் 38 கோடியே 2 லட்சத்து 40 ஆயிரம் செலவில் பயனடைந்துள்ளனர். இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின்கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 அரசு மருத்துவமனைகள், 5 தனியார் மருத்துவ மனைகள் இத்திட்டத்தில் இணைந்து, இது வரை ரூபாய் 2 கோடியே 26 லட்சத்து 78 ஆயிரம் செலவில் 2,993 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். கண்ணொளி காப்போம் திட்டத்தின்கீழ், பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு, 2023ஆம் ஆண்டில் 4,510 மாணவ, மாணவியர்களுக்கும் மற்றும் 202324 ஆண்டுகளில் 3,617 , மாணவியர்களுக்கும் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின்கீழ், 2023 ஆம் ஆண்டில் 20,849 கர்ப்பிணி பெண்களுக்கு 12 கோடியே 98 லட்சத்து 26 ஆயிரம் ரூபாயும் மற்றும் 202324 ஆம் ஆண்டில் 18,073 கர்ப்பிணி பெண்களுக்கு 10 கோடியே 80 லட்சத்து 64 ஆயிரம் ரூபாயும், மகப்பேறு உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கலைஞர் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ், 2023ஆம் ஆண்டில் 39 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 38,266 நபர்களும் மற்றும் 202324 ஆம் ஆண்டில் 39 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 39,409 நபர்களும் பயனடைந்துள்ளனர்.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் இதுபோன்ற மக்கள் நலத்திட்டங்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரிடமும் கொண்டு சேர்த்து பயனடைய செய்ய வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், 10 புதுமைப் பெண் திட்ட பயனாளிகளான மாணவிகளுக்கு வாழ்த்துமடல் அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து, சட்டத்துறை அமைச்சர் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், புதுமைப் பெண் திட்ட பயனாளிகளுக்கு வாழ்த்து மடலை வழங்கினார்.

இக்கூட்டத்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி , அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மருத்துவர் இரா.மணி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மருத்துவர் சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், துணை இயக்குநர்கள் (சுகாதாரப் பணிகள்) மருத்துவர் ராம் கணேஷ் (புதுக்கோட்டை), மருத்துவர் நமச்சிவாயம் (அறந்தாங்கி), மாவட்ட சமூகநல அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, ஒன்றியக்குழுத் தலைவர்கள் வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), வி.ராமசாமி (அன்னவாசல்), நகர் மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### தஞ்சை மாவட்டத்தில் சாலை விபத்து:

# உயிரிழந்த 4 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 22-**

**தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின்கு குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

தூத்துக்குடி மாவட்டம், மூணாவயல் கிராமத்திலிருந்து நான்கு சக்கர வாகனத்தில் வேளாங்கண்ணிக்கு குடும்ப நிகழ்ச்சிக்காகச் செல்லும் வழியில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சேதுபாவாசத்திரம், மனோரா அருகில் நேற்று அதிகாலையில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த விபத்தில் பாக்கியராஜ் (வயது 62) திருமதி.ஞானம்மாள் (வயது 60) திருமதி.ராணி (வயது 40) மற்றும் சின்னபாண்டி (வயது 40) ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக் கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா இருபத்தைந்தாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# செஞ்சி அனையேரியில் 1000 பேருக்கு நல உதவிகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்!

செஞ்சி ஜன 22.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் அனையேரி ஊராட்சியில் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஒன்றிய கவுன்சிலர்உமா மகேஸ்வரி ஆனந்தன் முன்னிலை வகித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர் ரவி அனைவரையும் வரவேற்றார்.நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1000 பேருக்கு ரூபாய் 1 லட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதில் செல்வமணி, தாட்சயாணி கார்த்திகேயன், அய்யாதுரை, இக்பால், அலெக்ஸ், தங்கவேல், பாபு தக்ஷிணாமூர்த்தி நடராஜ், ஏழுமலை, பாண்டியன், மணி, பாண்டுரங்கன், சிவா, பிராங்கிளின் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.ஏ. சாமிநாதன்
### சனவரி 22 (2011)



மாணவப் பருவத்தில் "தமிழ்மன்றம்" என்ற அமைப்பினை தனது பகுதியில் துவக்கிய இவர், அப்போதிலிருந்தே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றிய இவர், 1975இல் கோவையில் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டினை சிறப்பாக நடத்தினார்.


1958ல் புளியம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1967ல் கோபிச்செட்டிபாளையம் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சி. சுப்பிரமணியத்தை எதிர்த்து, கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தொகுதியில் 1971ல் ஈ.வி.கே. சம்பத்தை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதியில் உள்ள ஏழைஎளிய மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றார். குறிப்பாக நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா சோம. திருநாவுக்கரசு
### சனவரி 22 (2014)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது பேச்சாற்றலைக் கேட்டு கழகத்தில் இணைய வேண்டும் என்று முடிவெடுத்து கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்தார்.

நெல்லை மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் – மாவட்டப் பொருளாளர் ஆகிய பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

நெல்லை நகர் மன்ற உறுப்பினராகப் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதுடன், கூட்டுறவு வங்கி, அர்பன் வங்கி ஆகியவற்றில் இயக்குநராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மொழிப் போராட்டத்தில் பங்கு பெற்று சிறையில் அடைக்கப்பட்டார். 'மிசா' சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சேலத்தில் புதிய வரலாறு படைத்திட்ட கழக இளைஞர் அணி

# 2 - வது மாநில மாநாடு எழுச்சிமிகு காட்சிகள் காணீர்!







சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டுத் திடலில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவச் சிலைகள் திறந்து வைத்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.











கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (21.1.2024) சேலம், பெத்தநாயக்கன் பாளையத்தில், திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில், கழகக் கொடியை நாடாளுமன்ற உறுப்பினரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி ஏற்றி வைத்தார். மாநாட்டினை மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்வில், கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, அந்தியூர் ப.செல்வராஜ், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத்தின் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கழகத்தின் மூத்த முன்னோடிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# திராவிட மாடல் அரசு 52

'**மு**த்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.



## 'ஏ.ஐ' – காலத்துக்கேற்ற கணினிக் கல்வி!

ஏ.ஐ. (AI) – ஆர்டிஃபீசியல் இன்டெலிஜென்ஸ். அதாவது, செயற்கை நுண்ணறிவு. எதார்த்த உலகிலும், மெய்நிகர் உலகிலும் இன்று இதுதான் பரபரப்பான பேசுபொருள்.

மனிதர்களை ஐந்தறிவு கொண்ட விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது, பகுத்தறிவு எனும் ஆறாம் அறிவு. அந்தப் பகுத்தறிவால், தான் வளர்த்துக் கொண்ட அறிவியல் மனப்பான்மையால் மனிதர்கள் செய்த கண்டுபிடிப்புகளும், உருவாக்கிய தொழில்நுட்பங்களும்தான் இன்று நாம் அனுபவித்து வரும் வசதிகளுக்குக் காரணம்.

அப்படியான வசதிகளில் ஒன்று, கணினி. அந்தத் தொழில்நுட்பம் இல்லாத துறைகளே இன்று உலகில் இல்லை. கணினி கண்டுபிடிக்கப்பட்ட காலம் தொட்டு இப்போது வரை மனிதர்கள்தான் கணினிக்கு உள்ளீடு (இன்புட்) தர வேண்டும். அதை உள்வாங்கிக் கொண்டு, வெகு விரைவில், நாம் எதிர்பார்க்கும் வெளியீட்டை (அவுட்புட்) அல்லது தீர்வை கணினி தரும்.

இந்தப் பணியைச் செய்ய வைக்க, கணினிக்குப் பல வகையான நிரல்களைக் கட்டளைகளாகக் கொடுக்க வேண்டும். அவ்வாறு பல்வேறு துறைகளுக்குத் தேவையான, பல வகையான நிரல்களைக் கொண்ட மென்பொருட்களை உருவாக்க இந்தியா உட்பட உலகம் முழுவதும் மென்பொருளாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்தத் துறையில் தமிழ்நாடும் தமிழர்களும் முன்னணியில் இருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்ததே..!

### கணினியில் புதிய பாய்ச்சல்

எல்லாத் துறைகளிலும் காலமாற்றத்துக்கு ஏற்ப பல முன்னேற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. அதுபோல கணினித் துறையிலும் அடுத்தகட்ட பாய்ச்சலுக்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் ஒன்றுதான் 'செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்'.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் மனிதர்கள் கணினிக்குக் கட்டளையிடுவது என்ற நிலையில் இருந்து முன்னேறி, கணினியையே சிந்திக்க



வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரோபோட்டிக்ஸ், சாட் ஜி.பி.டி. போன்றவை எல்லாம் அதன் ஒரு பகுதிதான்.

இந்தப் புதிய களத்திலும் வருங்காலத்தில் தமிழர்கள் முன்னணியில் நிற்க வேண்டும் என்ற சீரிய இலக்கின் அடிப்படையில் நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு', கொண்டு வந்துள்ளதுதான் 'டீல்ஸ் (TECHNOLOGY EDUCATION AND LEARNING SUPPORT - TEALS)' எனும் திட்டம். கணினி உலகில் முன்னணி நிறுவனமாக விளங்கி வரும் மைக்ரோசாஃப்ட் உடன் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது நம் கழக அரசு.

### கணினிக் கல்வியை வலுப்படுத்த...

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கணினிக் கல்வியில் வலுவான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்க உருவானதுதான் 'டீல்ஸ்' திட்டம். அமெரிக்காவைச் சேர்ந்த கெவின் வாங் எனும் கணினி ஆசிரியரால் 2009-இல் உருவாக்கப்பட்டது இந்தத் திட்டம். பின்னாளில் அந்தத் திட்டம் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் 'மைக்ரோசாஃப்ட் கொடையாளர்' (மைக்ரோசாஃப்ட் பிலாந்த்ரபி) எனும் பரோபகாரப் பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது.

உலகம் முழுவதும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வரும் மைக்ரோசாஃப்ட் நிறுவனம், இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில் இதைச் செயல்படுத்துகிறது. இதன் மூலம் அரசுப் பள்ளியில் பயிலும் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக கடந்த 2023 ஜூலை மாதம் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் தமிழ்நாடு அரசு கையெழுத்திட்டது. தொடர்ந்து, 10 அரசுப் பள்ளிகள், 2 அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் 2 தனியார் பள்ளிகள் என மொத்தம் 14 பள்ளிகளில் சோதனை முறையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மாணவர்களின் கணினித் திறனில் அந்தத் திட்டம் செய்த சிறப்பான பங்களிப்பைத் தொடர்ந்து, இந்த ஆண்டு மேலும் 100 பள்ளிகளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது நம் கழக அரசு.

### முந்தியிருப்பச் செயல்

ஏற்கெனவே அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் 'கோடிங்' பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் அடுத்த கட்டமாக, 'மெஷின் லேர்னிங்' எனும் தளத்தில் மாணவர்களுக்குப் போதுமான அளவு அறிமுகத்தையும், அடிப்படைத் திறன்களையும் வழங்குவதுதான் இந்த 'டீல்ஸ்' திட்டத்தின் முக்கிய நோக்கம்.

இந்தப் பயிற்சிகளை மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் நிபுணர்கள் மூலம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் மூலம் மாணவர்களுக்குக் கடத்தப்படும். சமயங்களில் நிபுணர்களும் நேரடியாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பார்கள்.

தற்போது சோதனை அடிப்படையில் வழங்கப்பட்டு வரும் பயிற்சியானது 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. வரும் ஆண்டுகளில் 6 ஆம் வகுப்பு முதலே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைத் தனிப் பயிற்சியாக இல்லாமல் பாடத்திட்டத்திலேயே கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் மாணவர்கள் வருங்கால டிஜிட்டல் உலகுக்குத் தங்களை 'அப்டேட்' செய்து கொள்ள முடியும்.

இவ்வாறு காலத்துக்கேற்ற படி மாணவர்களை முந்தியிருக்கச் செய்யும் தாயுமானவ முதலமைச்சரை எவ்வளவு போற்றினாலும் தகும்..!

...சாதனை தொடரும்

### செம்ம 'டீல்' இல்ல..?

நாட்டிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் இந்த 'டீல்ஸ்' திட்டத்தைச் சிறுமைப்படுத்தும் விதமாகச் சிலர், 'இது தேசிய கல்விக் கொள்கையில் சொல்லப்பட்ட திட்டம்' என்ற தவறான தகவலைப் பரப்பி வருகின்றனர்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாட்டுக்கென்று நீண்ட வரலாறும் நெடிய பாரம்பரியமும் உண்டு. 1970 ஜூலை 16 ஆம் தேதி அன்றைய கிண்டி பொறியியல் கல்லூரியில் (இன்றைய அண்ணா பல்கலைக்கழகம்) நடந்த தமிழ் மன்ற விழாவில் தந்தை பெரியார் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். அங்கு சென்ற தந்தை பெரியாரிடம் கல்லூரிக்கு என புதிய கம்ப்யூட்டரை வாங்கி இருப்பதாக, அங்கு இருக்கும் பேராசிரியர்கள் தெரிவிக்க அதைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டார் பெரியார். அப்போது அதற்கு 'கணினி' என்கிற பெயர் கூட வைக்கப்படவில்லை. ஐ.பி.எம் கம்ப்யூட்டர் 1620 மாடல் கணினி அது. எந்தத் தேதியைச் சொன்னாலும் அதன் கிழமையை மிகச் சரியாக அந்தக் கணினி சொல்லிவிடும் என்கிற செய்தியை அங்குள்ள பேராசிரியர்கள் சொல்ல, பெரியார் சில தேதிகளைச் சொல்லி, கிழமை சரியாக வருகிறதா என்று பார்த்தார். தன்னுடைய பிறந்த நாளையும் அவர் சொல்ல சரியாக சனிக்கிழமை என்று கூறியது அந்தக் கணினி. அவரிடம் இந்தக் கணினி பற்றிக் கூறியது அன்றைய பேராசிரியரும் பின்னாளில் துணைவேந்தரும் ஆன வா.செ.குழந்தைசாமி அவர்கள்.

இதன் தொடர்ச்சியாக 1997-லேயே அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்துத் தமிழ்நாட்டுக்கெனத் தனியே தகவல் தொழில்நுட்பத் துறைக்கான கொள்கை ஒன்றை உருவாக்கி, தனியாக ஒரு துறையை உருவாக்கி, அதற்கென ஒரு அமைச்சரை நியமித்தார்.

தகவல் தொழில்நுட்பத் துறை பற்றி, நாட்டின் பிறமாநிலங்கள் பெரிதும் விழிப்புணர்வு அடையாத காலகட்டத்திலேயே பள்ளிகளில் கணினி பாடப்பிரிவு, டைடல் பார்க், 'மின்னணு நிர்வாகம்' (E-GOVERNANCE) போன்ற கட்டமைப்புகளை மாநிலத்தில் உருவாக்கினார். தேசிய கல்விக் கொள்கை என்கிற ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்பாகவே இவையெல்லாம் நடந்தன.

தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், அதில் மாநிலங்கள் அடைய வேண்டிய இலக்குகள் என்று சொல்லப்பட்டிருக்கும் பலவற்றை தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்துவிட்டது. எடுத்துக்காட்டாக, 2035-க்குள் தேசிய அளவில் மாணவர் சேர்க்கை விகிதத்தை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்று தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. ஆனால், தமிழ்நாடு, 2019-2020 கல்வி ஆண்டிலேயே 51.4 சதிவிகிதத்தை எட்டிவிட்டது. 2035-க்குள் தமிழ்நாடு 100 சதவிகிதத்தையே எட்டிவிடும். தமிழ்நாடு அரசு செய்ததை, செய்துகொண்டிருப்பதை தேசிய கல்விக் கொள்கையில் இணைத்துவிட்டு, தேசிய கல்விக் கொள்கையின்படி தமிழ்நாடு செயல்படுகிறது என்று சொல்வது நகைப்புக்குரியது.

முன்னோடி மாநிலமான தமிழ்நாட்டில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் செயற்கை நுண்ணறிவு, மெஷின் லேர்னிங் போன்றவற்றில் வருங்காலத்தில் மிகத் தீவிரமாகப் பயிற்சிகள் அளிக்கப்படும். ஏனெனில் செயற்கை நுண்ணறிவைக் கையிலெடுக்கும் மாநிலமே இன்னும் பத்தாண்டுகளில் முன்னணி மாநிலமாக இருக்கப்போகிறது. அதற்கான அஸ்திவாரம்தான் 'டீல்ஸ்'... செம்ம 'டீல்' இல்ல...?

### அப்புறம் எதற்குத்தான் ஆதார்?

நாட்டில் ரேசன் கார்டு இல்லாதவர்களிடம்கூட, ஆதார் கார்டு இருக்கிறது. ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், வங்கிச் சேவைகள், காப்பீடு என மக்களின் சகலவிதமான தேவைகளுக்கும் ஆதார் இருந்தால்தான் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நிலை இருக்கிறது.

ஆனால், கடந்த சில நாட்களுக்கு முன்பு, ஊழியர் வருங்கால வைப்பு நிதிக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் ஆதார் அட்டையை பிறந்த தேதிக்குச் சான்றாகக் காட்டினால், அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று தெரிவித்துள்ளது. மேலும் ஆதார் என்பது அடிப்படையான அடையாளக் கருவிதானே தவிர, அதனைப் பிறப்பு தேதிக்கு ஆதாரமாகக் கொள்ள இயலாது என்றும் தெரிவித்துள்ளது.

ஆதார் அடையாள அட்டை வழங்கும் அமைப்பிடம் இருந்து வந்த தகவலுக்குப் பிறகே வைப்பு நிதிக் கழகம் இந்த அறிவிப்பைச் செய்வதாகவும் தெரிவித்துள்ளது. ஆதார் மூலமாக தனிநபர் தகவல்கள் திருடப்படுகின்றன என்று ஏற்கெனவே பலரும் குற்றம்சாட்டி வரும் நிலையில், 'பிறப்பு தேதிக்குச் சான்றாகக் காட்ட முடியாது என்றால், வேறு எதற்குத்தான் ஆதார்' என்று கேள்வி எழுந்துள்ளது.

### ஃப்ளாஷ்பேக்



### தொண்டன் மீது பரிவு!



குருசாமி

1976 ஆம் ஆண்டு நெருக்கடி நிலையைக் காரணம் காட்டி, கழக ஆட்சி கலைக்கப்பட்டது. மிசா வழக்கு நிதி வழங்க, தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதினார். இளம் வயது மாணவனாக, தலைவர் கலைஞரை அவரது கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, மிசா வழக்கு நிதி வழங்கினேன். அடுத்தாண்டு பொன்னேரியில் நடைபெற்ற என் திருமண விழாவுக்கு, கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்து, எங்களை எல்லாம் வியப்பில் ஆழ்த்தியது மட்டுமல்லாமல், ஒரு சாதாரண தொண்டன் மீது கழகத் தலைவர் கொண்டிருந்த பரிவையும் வெளிப்படுத்தியது.

-ஜி.குருசாமி, பொன்னேரி, திருவள்ளூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**கழகத் தலைவரின் முதல் தேர்தல் பணி!**

**1968-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சித் தேர்தலில் 99-ஆம் வட்டத்தில் டி.கே.கபாலியும், 109-வது வட்டத்தில் இரா.சடகோபனும் போட்டியிட்டனர். இருவரையும் ஆதரித்து, கோபாலபுரம் இளைஞர் தி.மு.க தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டது. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முதல் தேர்தல் பணி இதுவாகும்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 360




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.